வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 23.03.2024 சனிக்கிழமை இதழ் : 83 பக்கங்கள் : 12

# சிங்கள இனத்தவருக்கு மணலாறில் காணிகள்!

## யாழில் வைத்து வழங்கினார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மார்ச் 23

**தமிழரின் இதயபூமி என்று வர்ணிக்கப்படும் மணலாறில் (வெலிஓயா) சிங்கள சமூகத்தவருக்கு வலி.வடக்கில் - ஒட்டகப்புலத்தில் - வைத்து காணி களை வழங்கி வைத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**



நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20 இலட்சம் பேருக்கு காணி உரிமை வழங்கும் “உறுமய” வேலைத் திட்டத்தின்கீழ் 408 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைத்தார். இவ்வாறு காணி உறுதி வழங்கப்பட்டவர்களில் அநேகமானவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களே என்று ஈழநாடு அறிந்து கொண்டது.

மணலாறு பிரதேசம் ஏற்கனவே வெலி ஓயா எனப் பெயர் மாற்றப்பட்டு 1980கள் முதல் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் பகுதியாக மணலாறு உள்ளது. இந்த இரு மாகாணங்களின் நிலத் தொடர்பையும் 11

# யாழுக்கு புதிய அமைப்பாளரை ஐ.தே.க. தெரிவு செய்யவில்லை!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அமைப்பாளர் ஒருவரை இன்னும் உத்தியோக பூர்வமாக தெரிவு செய்யவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு 11

### பருத்தித்துறை மருத்துவமனையில்

# அவசர சிகிச்சைப் பிரிவை திறந்து வைத்தார் ஜனாதிபதி!

வடமராட்சி, மார்ச் 23

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

இந்த அவசர சிகிச்சை பிரிவு நெதர்லாந்து அரசாங்கத்தின் இலகு கடன் திட்டத்தில் - சுமார் 400 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த 11

# எந்த இனத்தை சேர்ந்தவரானாலும் காணி உரிமை கிடைக்க வேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் கூறினார் ஜனாதிபதி

- படைகள் வசமிருந்த 69,000 ஏக்கர் விடுவிப்பு
- போரின் பின்னரான பிரச்னைகளுக்கு தீர்வு
- வடக்கு பொருளாதார மையமாக்கப்படும்



யாழ்ப்பாணம், மார்ச் 23

எந்த இனத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் காணி உரிமை கிடைக்க வேண்டும். அதற்காகவே “உறுமய” வேலைத்திட்டம் அண்மையில் தம்புளையில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஒரு சிலருக்கு மாத்திரம் அதன் பலன் கிடைத்திருந்தாலும், ஜூன் மாதமளவில் அந்த வேலைத் திட்டத்தை முழுமையாக நிறைவு செய்யுமாறு 11



# படைகளின் வசமிருந்த 234 ஏக்கர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் படைத் தலைமையகத்தின் வசமிருந்த 234 ஏக்கர் காணிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று விடுவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி 11

# சிறுமியை வன்புணர்ந்த தந்தை கைது!

வவுனியா, மார்ச் 23

14 சிறுமி ஒருவரை வன்புணர்வு செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவரின் தந்தையை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வவுனியா - தோணிக்கல் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி தனக்கு நேர்ந்த துன்புறுத்தல் தொடர்பில் தனது நண்பியிடம் கூறியுள்ளார். 11

### மீண்டும் குறிவைக்கப்படும் சிறார்

# மன்னாரில் மாணவியை கடத்த முயன்றவர் கைது!

மன்னார், மார்ச் 23

மன்னாரில் 12 வயதான மாணவியை கடத்திச் சென்றவரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் காலை மன்னார் நகரில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பிரபல பாடசாலையை சேர்ந்த மாணவி பேருந்தில் வந்து இறங்கி பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அந்தச் சமயம் ஓட்டோவில் வந்த நபர், மாணவியை பாடசாலையில் இறக்கி விடுவதாகக்கூறி ஓட்டோவில் ஏறுமாறு கூறியுள்ளார்.

சிறிது தூரம் பயணித்த ஓட்டோ ஒழுங்கை ஒன்றின் ஊடாக பயணிக்க முனைந்தது. 11

# பாரிஸ் கிளப், இந்தியாவுடன் கடன் சீரமைப்பு இறுதிக்கட்டம்!

கொழும்பு, மார்ச் 23

பாரிஸ் கிளப் நாடுகள் மற்றும் இந்தியா ஆகியவற்றுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாட்டை எட்டுவதற்கான இறுதித்தறுவாயில் இலங்கை உள்ளது. 6 வருடங்கள் வரை கடன்மீள் 11

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்!

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, மார்ச் 23

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். 11

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவரை எனக்கு தெரியும்

### அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால



கண்டி, மார்ச் 23

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களை யார் நடத்தியது என்ற உண்மையை இன்னமும் எவரும் கூறவில்லை. ஆனால், அந்தத் தாக்குதல்களை நடத்தியது யார் என்பது எனக்குத் தெரியும் - இவ்வாறு அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டபோது ஜனாதிபதியாக இருந்தவரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும், ஈஸ்டர் தாக்குதல் குறித்த தகவல்களை வெளிப்படுத்துமாறு நீதிமன்றம் 11

# இப்படியும் நடக்கிறது

அண்மையில், சில நாட்களாக பாராளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன அதிக நாட்டம் கொண்டிருக்கின்றமையை காணமுடிகின்றது.

அவர்கள் அவ்வாறு கூறுவதற்கு அல்லது பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த விரும்புவதற்கு என்ன காரணம் என்பது குறித்து தெற்கில் சில ஊடகவியலாளர்களுடன் பேசியபோது பல தகவல்கள் கிடைத்தன.

இப்போது மகிந்த ராஜபக்ஷ மாத்திரமன்றி வேறு சில கட்சிகளும் அதனையே வலியுறுத்தத் தொடங்கியிருக்கின்றன என்கின்றன அந்தத் தகவல்கள்.

இன்றைய நிலையில் ரணில், சஜித், அநுரகுமார என்று மூன்று வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் முதலில் கடும் போட்டி அதாவது முதல் இருவருக்கான போட்டியில் அநுரவுக்கும் சஜித்துக்கும் இடையேதான் கடும்போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றதாம். ரணில் இன்றைய நிலையில் மூன்றாமிடத்திலேயே இருக்கிறார் என்கின்றன தெற்கு செய்திகள். இந்நிலையில், ரணிலும் சஜித்தும் சேர்ந்தால்தான் அநுரவின் தோல்வியை உறுதி செய்யலாம் என்பதால் இருவரையும் ஒன்றிணைக்கப் பலரும் முயன்று வருகின்றனர். இந்தியா-அமெரிக்கா மட்டுமின்றி சஜித்துடன் இருக்கும் பெரும்பாலானவர்களும் இருவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றபோதிலும், ரணிலுக்கு கிடைக்கும் வாக்குகளை விடத் தனக்கு அதிகம் வாக்குகள் கிடைக்கும் என்கின்ற நிலை இருக்கும்போதுதான் எதற்காக ஜனாதிபதி பதவியை அவருக்கு விட்டுக்கொடுக்கவேண்டும் என்று அவர் வாதிடுவதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால், ரணில் தரப்பு இன்னமும் முழுமையான பிரசாரத்தை தொடங்காத நிலையில் -

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க இன்னும் சில விடயங் களை எதிர்பார்த்திருக்கும் ஜனாதிபதி ரணில் ஐ. எம். எவ் வின் அடுத்த கட்டக் கடன் கிடைத்ததும் மேலும் சில நன்மைகள் கிடைக்கலாம் என்று எதிர்பார்த்திருக்கிறார். ரூபாயின் மதிப்பு மெல்லமெல்ல அதிகரித்து இன்று டொலருக்கு எதிரான பெறுமதி முந்நூறைவிட குறைந்துவிட்ட நிலையில் மேலும் அது குறையலாம் என்று எதிர்பார்க்கிறார்.

இவ்வாறு ரூபாயின் மதிப்பு அதிகரிக்க அதிகரிக்க அதன் பலனை பொதுமக்கள் அனுபவிக்கத் தொடங்குவார்கள். அதாவது, பொருட்களின் விலைகள் குறையலாம். அப்படியொரு நிலைமை வரும்போது தன் மீதான ஆதரவு மேலும் அதிகரிக்கும் என்று ரணில் நினைக்கின்றார்.

அப்போதுதான் மற்றைய இருவரையும் “ரேசில்“ முந்தலாம் என்று ரணில் கருதுவதாகத் தெரிகின்றது. இது அவரின் எதிர்பார்ப்பு அல்லது கணிப்பு என்றாலும் இன்றைய நிலையில் இறங்கிவர சஜித் தயாராக இல்லை.

இந்த நிலையில் முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் சஜித் தரப்பே அதிக இடங்களைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதால் பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடைபெற்று சஜித் தரப்பு ஆட்சியமைக்க போதிய பலத்தைப் பெறமுடியாவிட்டாலும் அதிக இடங்களைப் பெறுகின்ற கட்சியையே ஆட்சியமைக்க ஜனாதிபதி கோரவேண்டியிருக்கும்.

அத்தகைய நிலை வரும்போது பிரதமராக பதவியேற்கும்படி ஜனாதிபதி விடுக்கும் அழைப்பை சஜித் நிராகரிக்க முடியாத நிலை ஏற்படும். அவர் அதனை ஏற்றுக்கொள்கின்றபோது, சில மாதங்கள் என்றாலும் ரணில் ஜனாதிபதியாகவும் சஜித் பிரதமராகவும் பதவி வகிக்கும்போது - ஜனாதிபதி தேர்தலுக்காக கூட்டணி அமைக்கின்றபோது - சஜித், ஜனாதிபதி ரணிலை தனது ஜனாதிபதி வேட்பாளராக ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் என்பதே.

இன்று பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைப்பவர்களின் திட்டமாக இருக்கின்றது என்கின்றார் தெற்கின மூத்த ஊடகர் ஒருவர்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரை மக்கள் மத்தியில் “விற்கக்கூடிய“ ஒரே முகம் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே என்பதால், அவர் ஓடியாடி பிரசாரம் செய்யக்கூடிய இன்றைய நிலையிலேயே தேர்தலை வைத்தால் மாத்திரமே ஆகக்கூடியது இருபது ஆசனங்களையாவது பெறலாம். ஜனாதிபதித் தேர்தல் நடந்து அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடக்கின்றபோது மகிந்த இன்னமும் பலவீனமான நிலைக்கு சென்றுவிட்டால் அவர் முன்னின்று நடத்தாத தேர்தல் பிரசாரத்தின்மூலம் ஒற்றை இலக்கங்களிலேயே ஆசனங்கள் கிடைக்கும் என்று அஞ்சுவதாகத் தெரிகின்றது. இதனாலேயே அவர்கள் இப்போது பாராளுமன்ற தேர்தலுக்கு அவசரப்படுகின்றார்கள் என்கிறார் அந்தத் தெற்கின் மூத்த ஊடகர்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றால், பாராளுமன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானத்தை நிறைவேற்றினால் மாத்திரமே ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க வேண்டிய இக்கட்டுக்கு வருவார். அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறக்கூடிய நிலை இப்போது இல்லை என்பதால் அதற்கும் சந்தர்ப்பம் இல்லை என்றே தெரிகின்றது.!

**- ஊர்க்குருவி.**

# மனோ எம்.பியுடன் வடக்கு, கிழக்கு மக்கள் மனு சிவில் சமூகம் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 23

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பியை, வடக்கு கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழு சந்தித்து உரையாடியது.

கொழும்பில் மனோ கணேசன் எம். பியின் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பில் மக்கள் மனு குழுவின் சார்பில் இணைப்பாளர் ஏ. யதீந்திரா, எஸ். எஸ். குகநாதன், எஸ். மகாலிங்கசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இது குறித்து செய்தியாளர்களுக்கு தெரிவித்தவை வருமாறு,

“எமது சந்திப்பு மிக காத்திரமாக நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள் அல்லது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சி தலைவர்களுடன், தமிழ் தேசிய பிரச்னை தொடர்பில், மாகாண சபைகள் என்ற அடிப்படையில் பொது குறைந்தபட்ச உடன்பாட்டைக் காண்பது தொடர்பில் கலந்துரையாடபட்டது.

வடக்கு, கிழக்கு மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுடன், குறைந்தபட்ச உடன்பாட்டை காணும் சிங்கள பிரதான கட்சிகள், தலைவர்கள் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் அந்த உடன்பாட்டை இடம்பெற செய்ய வேண்டும் என கலந்துரையாடினோம். எதிர்வரும் தேர்தல் பாராளுமன்றத் தேர்தலா, ஜனாதிபதி தேர்தலா, அவ்வாறாயின் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள், பொது தமிழ் வேட்பாளர் ஆகிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினோம்.

“வாக்களியுங்கள், ஆட்சிக்கு வந்த பிறகு பார்ப்போம்” என்ற நிலைபாட்டுடன் தமிழ் மக்கள் மத்தியில் வந்து வாக்குக் கேட்க சிங்கள பிரதான கட்சிகள், கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கு இனிமேல் இடம் தர முடியாது என்ற பொது நிலைபாட்டை பற்றியும் உரையாடினோம்.

தமிழ் முற்போக்கு கூட்டணியால், மலையக தமிழர் தொடர்பில் சமூக நீதி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து சிங்கள பிரதான கட்சிகளுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் கலந்துரையாட திட்டமிட்டுள்ளது. எமது ஆவண நிலைப்பாடுகள், அந்தந்த கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இடம் பெறுவதை பொறுத்தே எமது நிலைப்பாடு அமையும் என்ற முடிவை நாம் ஏற்கனவே எடுத்துள்ளோம் என்பதை நான், வடக்கு, கிழக்கு மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுக்கு எடுத்து கூறினேன்.

ஈழத்தமிழ் சகோதரர்களின் குறைந்தபட்ச அபிலாஷைகளை நடைமுறை சாத்தியமான முறையில் விட்டுக்கொடுக்காமல் முன்னெடுக்கும் வடக்கு கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க தயார் என்று உறுதியளித்துள்ளேன் - என்றார். (ஐ)

# தாவரத் தடுப்பு காப்பு நிலையம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 23

விவசாய உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான அனுமதியளிக்கும் தாவரத் தடுப்புக் காப்பு நிலையம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மரக்கறி, பழங்கள், பூ, விதை வகைகள், நுண்ணங்கிகள், பூ அலங்காரங்கள் போன்ற தாவர உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் இந்நத நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இதுவரை காலமும் கொழும்பில் இயங்கிய மேற்படி நிலையம் வடபகுதி மக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் தலைமை தபாலகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் தபாலக அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# கொழும்பில் கடும் மழை; 31 வரை தொடருமாம்!

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலைக்கு மத்தியில் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் கடும் மழை பெய்தது.

குறிப்பாக, கொழும்பு நகரின் பல பகுதிகளில் கடும் மழை பெய்வதால் வெள்ளம் தேங்கியது. இதேவேளை, எதிர்வரும் 31ஆம் திகதி வரை மழை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் கால நிலை மாற்றத்தால் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும் என மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய இணைப்பாளர் சுப்பிரமணியம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களிலும் பல தடவை மழை பெய்யக்கூடும். ஏனைய பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை திடீர் கால நிலை மாற்றம் காரணமாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நேற்று முன்தினம் வியாழக்கிழமையில் இருந்து அவ்வப்போது மழை பெய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதாள உலகக் குழுவினர் 10 பேர் ஒருநாளில் கைது!

கொழும்பு, மார்ச் 23

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நள்ளிரவு 12.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் யுக்திய நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, பாதாள உலகக் குழுவினரை ஒழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 3 நாட்களில் 27 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.03.2024 சனிக்கிழமை
සිළුනාඩු
சோபகிருது வருடம், பங்குனி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தலைமை இல்லாத சமூகம்

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாடு யாரால் வழிநடத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்தே அமையும். இதேபோன்று, ஒரு சமூகத்தின் எதிர்காலம் அந்த சமூகம் யாரால் வழிநடத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்ததே அமையும். இன்று தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. இதற்கு ஒருவர்மீது குற்றஞ்சாட்டிவிட்டுப் போக முடியாது. கடந்த 75 வருடங்களாக அரசியலுக்கு தலைமை தாங்கிய அனைவரும் இதற்கான பொறுப்பாளிகளாவர். இன்று தமிழினத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது என்றால் – அதன் கடந்தகாலம் சிக்கலுக்கு உரியதாக இருந்திருக்கின்றது என்பதே பொருளாகும். ஏனெனில், ஓர் இனத்தின் அரசியல் எதிர்காலம் என்பது கடந்த காலத்தின் தொடர்ச்சியாகும். கடந்த காலத்தில் விடயங்கள் சரியாக கையாளப்படாது விட்டால், அந்த சமூகத்தின் எதிர்காலம் பெரும் நெருக்கடிக்குள் சிக்கிவிடும். அந்தச் சிக்கலில் இருந்து விடுபட முடியாமல் போனால் அந்த சமூகம் அதன் அடையாளத்தைக்கூட இழக்க நேரிடலாம்.

1949இல் இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கிய எஸ். ஜே. வி. செல்வநாயகம், கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது –“நான் உங்களுக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கித் தருவேன்”, என்று கூறியிருந்தார். அவரின் கருத்துக்குள் மறைந்திருப்பது அந்த அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான அரசியல் ஏற்பாடுதான் சமஷ்டி. அதனை அடைவது தான் தங்களுடைய கட்சியின் இலக்கு. ஆனால், இன்று 75 வருடங்களுக்கு பின்னர் திரும்பிப் பார்த்தால் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக வடக்கு – கிழக்கில் வாழமுடியுமா என்னும் கேள்வியில்தான் தமிழர் வரலாறு தரித்து நிற்கின்றது. இதற்கு பின்னர் தமிழ் மக்களுக்கு தனித்துவமான அரசியல் இருக்கின்றதா என்னும் கேள்வி அனைவரையும் அச்சுறுத்துகின்றது.

ஆனால் மறுபுறம், இவ்வாறான எந்தவொரு நிலைப்பாட்டையும் முன்னிறுத்தாது அரசியலை முன்னெடுத்த மலையக மற்றும் முஸ்லிம் மக்கள் ஒப்பீட்டு அடிப்படையில் தங்களின் தனித்துவத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை. இதேவேளை, பின்நோக்கியும் செல்லவில்லை – பல்வேறு வழிகளிலும் முன்னோக்கியே பயணித்திருக்கின்றார்கள். ஆனால், ஒரு தமிழ் சமூகமாக வழிநடத்தும் வல்லமையுடன் இருந்த ஈழத் தமிழினம் மோசமான வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றது. எல்லாவற்றுக்கும் இரந்து நிற்கும் சமூகமாக மாறியிருக்கின்றது. ஒரு காலத்தில் அறிவில் மேலோங்கிகளாகத் தங்களை அடையாளப்படுத்தியிருந்த ஈழத் தமிழ் சமூகமோ இன்று தன்னை அரசியல் ரீதியில் நிலைநிறுத்திக் கொள்வதற்கு முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

இதற்கு யாரைக் குற்றஞ்சாட்டுவது? குற்றஞ்சாட்ட வேண்டுமென்றால் தமிழ் அரசியலைத் தீர்மானிக்கப் போவதாகக்கூறி அதனை வழிநடத்த முற்பட்டவர்கள் அனைவரின் தீர்மானங்களையும் ஆராய வேண்டிய நிலையேற்படும். அவ்வாறு அனைத்தையும் “போஸ்ற்மோட்டம்” செய்வதால் இன்றைய நிலையை மாற்றியமைக்கவும் முடியாது. ஆனால், சில விடயங்களில் தெளிவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது தவிர்க்கவே முடியாதது. அதாவது, தமிழ் மக்களின் இன்றைய நிலைக்குக் காரணம் – அரசியல் தலைமைகளின் தங்களைப் பற்றிய மிகை மதிப்பீடுகள் – இதன் காரணமாக வாய்ப்புகளை தவறவிட்டமை – இதுவே அனைத்துவிதமான வீழ்ச்சிகளுக்கும் காரணமாகும்.

அந்தத் தவறை இனியும் செய்துவிடக்கூடாது – தற்போது வெள்ளம் தலையைத் தொடும் நிலையை எட்டிவிட்டாலும்கூட, தலையை முடிந்தவரையில் பாதுகாக்கும் பொறிமுறைகள் என்ன என்பது தொடர்பில் இன்றுள்ள தலைமைகள் சிந்திக்க வேண்டும் – இனியும் சிந்திக்க மாட்டோம் என்று அடம்பிடித்தால் தலை தப்புவது கடினம் – இங்கு தலை என்பது தமிழ் மக்களுக்கான அரசியலை குறிக்கின்றது.

இன்றுள்ள பிரதானமான பிரச்னை – தமிழ் மக்களை யதார்த்தபூர்வமான அரசியல் பாதையொன்றால் வழிநடத்துவதற்கான தலைமைகள் இல்லாமை. இதனை எதிர்கொள்ள வேண்டும் என்றால் தற்போது கட்சிகளாக இருப்பவர்கள் முடிந்தவரையில் தங்களை ஓர் ஜக்கிய முன்னணியாக்கிக் கொண்டு, உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் துணிவுடன் அரசியலை கையாள வேண்டும்.

# தெரிவுக்குழு பரிந்துரைகளை முழுமையாக ஏற்கின்றோம்!

## அரசாங்க நிதிக் குழுவுக்கு மத்திய வங்கி அறிவிப்பு

*கொழும்பு, மார்ச் 23*

சம்பள அதிகரிப்பு தொடர்பில் தெரிவுக்குழு முன்வைத்த பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக வும்,சம்பள அதிகரிப்பு செயற்படுத்தலை பிற்போடுவதாகவும் மத்திய வங்கி அரசாங்க நிதி பற்றிய தெரிவுக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் சேவையாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஆளும் மற்றும் எதிர் தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய நிலையில் மத்திய வங்கியின் ஆளுநர்கள் உட்பட மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் அண்மையில் கட்சித் தலைவர் கூட்டத்துக்கும், அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கும் முன்னிலையாகியிருந்தனர்.

மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்துக்கு முழுமையான அறிக்கையை சமர்ப்பித்தார்.

அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு இடையேயான கடிதப் பறிமாற்றத்தின் அடிப்படையில், மத்திய வங்கியின் சுயாதீனத்துக்கு இடையூறு விளைவிக்காத வகையில் பிரச்னைகளுக்கு சாத்தியமான தீர்வானது மார்ச் மாதம் 16 ஆம் திகதி கையளிக்கப்பட்ட கடிதத்தின் விசேட குறிப்புடன் “இலங்கை மத்திய வங்கி - சம்பளத் திருத்தம் 2024-2026” எனும் தலைப்பில்,அரசாங்க நிதி பற்றிய குழு தற்காலிக சுயாதீனமான,ஊதியக் குழுவை நிறுவுவதற்கு பரிந்துரைத்துள்ளது.

மத்திய வங்கி ஆளுநரின் இணக்கப்பாட்டுடன் நிதி அமைச்சர் சர்ச்சைக்குரிய சம்பள அதிகரிப்பு குறித்து முழுமையான பரிசீலனைகளை மேற்கொண்டு நான்கு வாரங்களுக்குள் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் பரஸ்பரமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு வரும் வரை சம்பள அதிகரிப்பு செயற்படுத்தலை ஒத்தி வைக்க மத்திய வங்கிக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

சம்பள குழுவின் உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய துறைகளில் இருந்தும்,மத்திய வங்கிக்கு வெளியில் இருந்தும் அதாவது தேவையானவாறு அரச சேவைகளில் இருந்தும் அதற்கு வெளியே இருந்தும் நியமிக்கப்படுவார்கள்.

சிறப்பு பணியாளர்களின் நிபுணத்துவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய வகையிலான ஒப்பீடு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அனைத்து ஊழியர் பிரிவுகளுக்கும் ஊதியத்தில் நியாயமான மாற்றங்களை மேற்கொள்ளுமாறும் அரசாங்க நிதி தொடர்பான குழு பரிந்துரைத்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு பற்றிய தெரிவுக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை முழுமையாக ஏற்பதாகவும்,சம்பள அதிகரிப்பு செயற்படுத்தலை ஒத்திவைப்பதாகவும் மத்திய வங்கி அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார். (அ)

# கிணற்றை சுத்தம் செய்தவர் உயிரிழப்பு!

*கொழும்பு, மார்ச் 23*

கொங்கிரீட் வேலைத்தளமொன்றில் உள்ள 22 அடி ஆழமுடைய கிணறு ஒன்றை சுத்தம் செய்துகொண்டிருந்த இருவர் சுவாசிப்பதற்கு சிரமப்பட்டு சுகயீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் கொஸ்கொடை - வதுரவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் எல்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடையவராவார்.

இரவு நேரங்களில் மழை பெய்யக் கூடிய வாய்ப்பு இருப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ள நிலையில், மழை பெய்த பின்னர் கிணற்றை சுத்தம் செய்ய சிரமம் ஏற்படும் என்பதால் கொங்கிரீட் வேலைத்தளத்தின் உரிமையாளரும் பணியாளர்களும் இணைந்து மோட்டார் மூலம் கிணற்றில் உள்ள நீரை அகற்றியுள்ளனர். இதன்போதே பாதிக்கப்பட்ட இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (அ)

# முல்லைத்தீவில் ஷெல் மீட்பு

*முல்லைத்தீவு, மார்ச் 23*

முல்லைத்தீவில் கொக்குளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளியமுனை பகுதியிலுள்ள தனியார் காணியிலிருந்து வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காணி உரிமையாளரினால் நேற்று முன் தினம் சுத்தம் செய்யப்பட்ட போது காணியில் மோட்டார் ஷெல் இருந்ததைக் கண்டுள்ளார்.

இதையடுத்து கொக்குளாய் பொலிஸாருக்கு காணியின் உரிமையாளரினால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் ஷெல்லினை மீட்டதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். எதிர்பாரத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். மனதிற்கு இதமான செய்தி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டி வரும். அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**துலாம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். லாபம்பெரும் நாள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். பணிகளை விரைந்துமுடிப்பீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# குடியுரிமை திருத்த சட்டத்தில் ஈழத்தமிழரை உள்வாங்குங்கள்

## அ. தி. மு. க. கட்சி தேர்தல் அறிக்கை

சென்னை, மார்ச் 23

குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்கள், இஸ்லாமியர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்று அ. தி. மு. க. கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவையும் மீட்க வேண்டும் என்றும் அதில் கூறியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் எதிர்வரும் 19ஆம் திகதி தமிழ்நாட்டில் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இந்த நிலையில், அ. தி. மு. க. கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தமது கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.



133 வாக்குறுதிகளை முன் வைத்துள்ள அ. தி. மு. க. கட்சி, சென்னையில் உச்சநீதிமன்றக் கிளையை நிறுவவேண்டும், தமிழை வழக்காடு மொழியாக பிரகடனம் செய்ய வேண்டும் என்பவற்றை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, தி. மு. க. கட்சியும் இதே விடயங்களை தனது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# நாம் தமிழர் கட்சிக்கு ‘ஒலிவாங்கி’ சின்னம்!

சென்னை, மார்ச் 22

நாம் தமிழர் கட்சிக்கு ஒலிவாங்கி (மைக்) சின்னம் ஒதுக்கீடு செய்துள்ளது இந்திய தேர்தல் ஆணையம்.

2024 மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிடப் போவதாக அறிவித்திருந்த நாம் தமிழர் கட்சியின் கரும்பு விவசாயி சின்னம் வேறு மாநில கட்சியான பாரதிய மக்கள் ஐக்கிய கட்சிக்கு ஒதுக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் தமிழர் கட்சி சார்பில் வழக்கு தொடுத்துள்ளது. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

ஏப்ரல் 19ஆம் திகதி தமிழ்நாட்டில் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு புதிய சின்னத்தை தெரிவு செய்தது நாம் தமிழர் கட்சி.

இதன்படி, அனுப்பிய சின்னங்களில் நாம் தமிழர் கட்சிக்கு ஒலிவாங்கி (மைக்) சின்னத்தை ஒதுக்கீடு செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

# பொன்முடி அமைச்சராக பதவியேற்றார்

சென்னை, மார்ச் 23

சொத்து குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் க. பொன்முடிக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ. 50 இலட்சம் அபராதம் விதித்து சென்னை உயர்நீதிமன்று உத்தரவிட்டது. இதை எதிர்த்து, பொன்முடி உச்சநீதிமன்றத்தில் முறையிட்டார். இந்த வழக்கில், உயர்நீதிமன்றம் விதித்த தண்டனை மற்றும் அபராதத்தை நிறுத்தி வைத்தது உச்சநீதிமன்றம்.

இதையடுத்து, அவருடைய தகுதி நீக்கம் இரத்தாகி மீண்டும் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினரானார். இதைத் தொடர்ந்து அவருக்கு மீண்டும் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநருக்கு சிபாரிசு செய்தார் முதலமைச்சர். ஆனால், அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் மறுத்து விட்டார்.

இந்த முடிவை எதிர்த்து தமிழக அரசு நீதிமன்றில் வழக்கு தொடுத்தது. இதையடுத்து, பொன்முடிக்கு பதவிப் பிரமாணம் செய்துவைக்க உத்தரவிட்டது நீதிமன்றம்.

இதைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை பொன்முடி ஆளுநர் மாளிகையில் அமைச்சராக பதவியேற்றார். எளிமையாக நடந்த இந்த நிகழ்வில் முதலமைச்சர் ஸ்டாலினும் பங்கேற்றார்.

(ஐ)

# பா. ஜ. கட்சியின் அண்ணாமலை கோவையில் போட்டியிடுகிறார்!

கோவை, மார்ச் 23

மக்களவைத் தேர்தலில் மிகுந்த எதிர்பார்ப்புக்கு இடையே கோவை மக்களவைத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார் பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை.

கோவை மக்களவைத் தொகுதியில் தி. மு. கவில் கணபதி ராஜ்குமார், அதிமுகவில் சிங்கை ஜி.ராமச்சந்திரன், பா. ஜ. கவில் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சியில் கலாமணி ஆகியோர் பிரதான வேட்பாளர்களாக களம் இறங்குகின்றனர்.

கோவை மக்களவைத் தொகுதியில் அ. தி. மு. க. கூட்டணியில் பா. ஜ. க. கடந்த 1998, 1999 தேர்தல்களில் வெற்றி பெற்றது.

.இந்தத் தொகுதியில் பா. ஜ. க. வெற்றி பெற்று 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நிலையில், தற்போது பா. ஜ. க. சார்பில் மாநில தலைவராகப் பதவி வகித்து வரும் அண்ணாமலை, கோவை மக்களவைத் தொகுதியில் போட்டியிடுகிறார். இதனால், தமிழகமே உற்றுநோக்கும் நட்சத்திர அந்தஸ்து தொகுதியாக கோவை மாறியுள்ளது.

# தங்கப்பச்சான் கடலூரில் போட்டி!

சென்னை, மார்ச் 23

கடலூர் மக்களவைத் தொகுதியில் இயக்குநர் தங்கர் பச்சான் போட்டியிடுவார் என பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்துள்ளது. இதனை அவரும் உறுதி செய்துள்ளார்.

பா. ஜ. கட்சியில் இடம் பெற்றுள்ள பா. ம. க. தனது 10 தொகுதிகளில் 9 தொகுதிகளில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை அறிவித்தது.



இதிலேயே தங்கர்பச்சானின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

தமிழில் வெளியான ‘அழகி’, ‘தென்றல்’, ‘ஒன்பது ரூபாய் நோட்டு’ உள்ளிட்ட படங்களின் மூலம் கவனம் பெற்றவர் இயக்குநர் தங்கர் பச்சான். முதன்முறையாக அவர் தேர்தல் அரசியலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், பா. ம. கவின் தலைவர் அன்புமணி ராமதாஸ் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் அரிசி கொள்வனவு செய்து மோசடி புரிந்த காலி வாசி கைது!

## யாழ்ப்பாண பொலிஸ் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

**யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அரிசி ஆலை ஒன்றில் 50 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அரிசி மூடைகளை கொள்வனவு செய்துவிட்டு, பணத்தை வழங்காது மோசடி செய்த குற்றச்சாட்டில் காலியை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**யாழில் உள்ள பிரபல அரிசி ஆலை ஒன்றில் 25 கிலோ எடையுள்ள ஆயிரத்து 200 அரிசி மூடைகளை காலியில் உள்ள மொத்த விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளார்.**

விற்பனையாளருக்கும், கொள்வனவாளருக்கும் இடையில் இடைத்தரகராக ஒருவர் செயல்பட்டுள்ளார்.

அரிசி மூடைகளை யாழில் இருந்து காலிப் பகுதியில் உள்ள மொத்த விற்பனை நிலையத்துக்கு லொறியில் சென்று கொடுத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் அரிசி மூடைக்கான பணத்தைத் தருமாறு கோரியபோது பணத்தைத் தாம் இடைத் தராகரிடம் வழங்கி விட்டதாக கூறியுள்ளனர்.

ஆனால் அந்தப் பணம் விற்பனையாளரிடம் வந்து சேராமையால் அவர் அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காலியில் அரிசியைக் கொள்வனவு செய்தவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தவேளை , தான் யாழ்ப்பாணத்தில் யாரிடமும் அரிசியை கொள்வனவு செய்யவில்லை என அவர் பதில் அளித்துள்ளார்.

பொலிஸார் களஞ்சிய அறையைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, யாழ்ப்பாண அரிசி ஆலையின் பெயர் பொறிக்கப்பட்ட அரிசி மூடைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அரிசி மூடைகளை மீட்ட பொலிஸார் அவற்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து சென்றதுடன், உரிமையாளரையும் கைது செய்து யாழ்ப்பாணம் அழைத்து வந்து , யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்ற விசாரணைகளை அடுத்து அரிசியை கொள்வனவு செய்தவரை பிணையில் செல்ல அனுமதித்த மன்று, மீட்கப்பட்ட அரிசி மூடைகளை விற்பனை செய்த நபரிடம் மீள கையளிக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. (அ)

# பண்டிகையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

கொழும்பு, மார்ச் 23

சிங்கள - தமிழ் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையை முன்னிட்டு ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை விசேட பொது போக்குவரத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, புகையிரத திணைக்களம் மற்றும் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் இதனை அறிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்கு கொழும்பு மத்திய பஸ் நிலையம் மற்றும் பஸ்ரியன் மாவத்தை தனியார் பஸ் நிலையம் ஆகியவற்றிலிருந்து பஸ் சேவைகள் இடம்பெறும் என இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# தகவல்கள் வழங்குவோருக்கான வெகுமதித் தொகை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 23

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் தொடர்பில் தகவல்களை வழங்குவோருக்கான வெகுமதி தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ரி-56 ரக துப்பாக்கி குறித்து தகவல் அளிப்பவருக்கு 500,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், தானியங்கி ஆயுதங்கள் அல்லது கைத்துப்பாக்கிகளுக்கு 300,000 ரூபாவும், ரிவோல்வருக்கு 250,000 ரூபாவும் வெகுமதியாக வழங்கப்படும் என காவல்துறை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)




# கனடா சென்ற அநுரவுக்கு மிகச்சிறப்பான வரவேற்பு

கொழும்பு, மார்ச் 23

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கனடாவின் ரொறன்ரோ மற்றும் வன்கூவர் ஆகிய இரு பிரதான நகரங்களில் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிமைகளில் நடத்தப்படவிருக்கும் இலங்கையர்களுடனான சந்திப்புக்களில் பங்கேற்பதற்காக அநுரகுமார திஸாநாயக்க கனடா சென்றுள்ளார்.

கனடாவுக்கு சென்றுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு ரொறன்ரோ விமான நிலையத்தில் கனடாவாழ் இலங்கையர்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொசன் பண்டிகையை பகலில் கொண்டாடலாமா?

## சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 23

இந்துக்களின் சிவராத்திரியை பகலில் நடத்துமாறு பொலிஸார் கூறுவதை போன்று பௌத்தர்களின் பொசன் தின நிகழ்வை பகலில் நடத்துமாறு பொலிஸாரினால் கூற முடியுமா என பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரியை அனுஷ்டிக்க இந்துக்களுக்கு நீதிமன்றம் அனுமதியளித்தபோதும் பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

வழிபாட்டுக்கு அனுமதித்தால் அங்குள்ள தொல்பொருட்கள் சேதமடையும் என்றால் அனுமதித்துவிட்டு அவற்றுக்கு சேதம் ஏற்படாமல் பொலிஸார் பார்த்திருக்கவேண்டும். அத்துடன் அங்கு சிவன் கோயிலே உள்ளது. எனவே தமது கோவிலை இந்துக்கள் சேதப்படுத்தமாட்டார்கள்-என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச, இந்தப் பிரச்னையை நீங்கள் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தபோது இரு மணித்தியாலங்களுக்குள் நாம் தீர்வு வழங்கினோம்.

எனவே ஏன் மறுபடியும் பேசுகின்றீர்கள். நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட விடயங்களுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காண முடியாது-என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன், அவ்வாறானதொரு பொலிஸ் அராஜகம் மீண்டும் நடக்கக் கூடாது என்பதற்காகவே நான் இங்கு பேசுகின்றேன்.

சிவராத்திரியை பகலில் அனுஸ்டிக்குமாறு பொலிஸார் குறிப்பிடுகிறார்கள். இதே போல் பொசன் பண்டிக்கையை பகலில் கொண்டாடுமாறு பொலிஸாரால் குறிப்பிட முடியுமா ? என கேள்வியெழுப்பினார். (அ)

# ரணில்-பஸில் சந்திப்பில் இணக்கப்பாடு இல்லை?

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன் தினம் இரவு சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜனாதிபதி தேர்தல் மற்றும் எதிர்வரும் தேர்தல்கள், அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு அமைச்சரவைக்கு அறிவித்ததன் பின்னரே இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

இதன்படி எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை பசில் ராஜபக்ஷ அறிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், தேர்தல்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாததால், எதிர்காலத்தில் இது தொடர்பில் மேலும் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விரிவாக்க முயற்சி

கொழும்பு, மார்ச் 23

இந்தியாவும் இலங்கையும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் ஊடாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நோக்கத்தை விரிவுபடுத்த முயல்வதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2000 ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கையின் ஏற்றுமதி திறனை மேம்படுத்துவதில் அதன் நோக்கத்தை சிறப்பாக செயற்படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியாக இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் அண்டைய நாடு என்ற அடிப்படையில் இலங்கை அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார். (அ)

# வெடுக்குநாறிமலை சம்பவம் மத சுதந்திரத்திற்கு பாதிப்பு

## பிரிட்டன் பாராளுமன்றத்தில் அமைச்சர் கவலை

**லண்டன், மார்ச் 23**

**வவுனியாவில் சமீபத்தில் இந்து ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவம் மத மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது என பிரிட்டன் தெரிவித்துள்ளது.**

**மட்டக்களப்பில் உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அச்றுத்தும் வகையில் பாரம்பரிய மேய்ச்சல் நிலங்களில் அரசாங்கத்தின் அனுசரணையுடன் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.**



பிரிட்டிஸ் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிய பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அலுவலக இராஜாங்க அமைச்சர் அன்ரூ மிட்ச்செல் இதனை தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்துவதை இலங்கை அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பிரிட்டன், புதிய இலங்கை தனது சர்வதேச கடப்பாடுகளுக்கு ஏற்ப புதிய சட்டத்தினை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரிட்டனின் அமைச்சர் அன்ரூ மிட்ச்செல மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் மனித உரிமை நிலவரம் என்பது பிரிட்டனின் முன்னுரிமைக்குரிய விடயம். அங்கு காணப்படும் நிலைமையை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

மனித உரிமை விடயங்களில் இலங்கை பிரிட்டனின் முன்னுரிமைக்குரிய நாடு என்பது அங்கு காணப்படும் பல்வேறுபட்ட மனித உரிமை விடயங்கள் குறித்த எங்களின் கரிசனைகளை பிரதிபலிக்கின்றது.

இலங்கையில் சிவில் சமூகத்தினர் தொடர்ந்தும் துன்புறுத்தல்களை, அச்சுறுத்தல்களை கண்காணிப்பினை எதிர்கொள்கின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவது நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். மிகவும் கொடுரமான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி விட்டு இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளின் அடிப்படையிலான சட்டத்தை கொண்டுவரவேண்டும் என நாங்கள் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கவேண்டும்.

இலங்கைஅரசாங்கம் சமீபத்தில் நிறைவேற்றிய நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். அது இணையவழி தொடர்பாடலை குறிப்பிடத்தக்க அளவிற்கு கட்டுப்படுத்தக்கூடிய பலவகையான கருத்து வெளிப்பாடுகளை குற்றமாக்கக்கூடியதாக காணப்படுகின்றது.

இலங்கையில் தமிழர்கள், முஸ்லீம்கள் உட்பட பல சமூகத்தினர் அரசஅதிகாரிகளால் ஒதுக்கப்படுதலை எதிர்கொள்கின்றனர் என்பதை இந்த சபை டிசெம்பரில் ஏற்றுக்கொண்டிருந்தது.

இது நிலங்கள் தொடர்பான பதற்றங்களை அதிகரித்துள்ளது. இது சிலவேளைகளில் மதவழிபாட்டுத் தலங்கள் தொடர்பானதாக காணப்படுகின்றது.

சமீபத்தில் வவுனியாவில் இடம்பெற்ற சம்பவத்தை சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறான சம்பவங்கள் நடவடிக்கைகள் மத சுதந்திரத்தின் நம்பிக்கை மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மட்டக்களப்பில் உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அச்றுத்தும் வகையில் பாரம்பரிய மேய்ச்சல் நிலங்களில் அரசாங்கத்தின் அனுசரணையுடன் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிகழ்வுகள் இனவாத பதற்றங்கள் மற்றும் இலங்கையின் வடக்குகிழக்கில் உள்ள தமிழர் பாரம்பரிய நிலங்களில் இருந்து கட்டாய இடம்பெயர்வுகள் குறித்த பதற்றத்தை உருவாக்கியுள்ளன-என்றார்.

(அ)

# கெஹலியவின் பிணை மனு ஆராய்வதற்கு திகதி குறிப்பு!

கொழும்பு, மார்ச் 23

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவை எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பான ஆவணங்கள் தமக்கு கிடைக்கவில்லை என சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் அறிவித்தார்.

இதன்படி, உரிய ஆவணங்களை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்குமாறு மனுதாரர்களுக்கு அறிவித்த நீதிபதி, மனுவை எதிர்வரும் திங்கட்கிழமை பரிசீலனைக்கு அழைக்குமாறும் உத்தரவிட்டார்.

(அ)

# மீண்டும் அம்பலமாகியுள்ளது எதிர்க்கட்சியின் வங்குரோத்து

## மொட்டு எம்.பி. குற்றச்சாட்டு




கொழும்பு, மார்ச் 23

எதிர்க்கட்சியின் வங்குரோத்து நிலைமை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் மீண்டும் அம்பலமாகியுள்ளதாக பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை கூறினார்.

எவ்வித தேவைப்பாடும் அடிப்படையுமின்றி நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்பட்டவதாகவும், நாட்டு மக்களுக்கு முன்வைப்பதற்கு எவ்வித திட்டங்களும் இல்லாத காரணத்தினால் எதிர்க்கட்சிகள் இவ்வாறு மக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் நம்பிக்கையில்லா தீர்மானங்களை கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடிப்படையின்றி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதனால் பணம் விரயமாவதினைத் தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை எனவும் சாகர காரியவசம் தெரிவித்தார்.

(அ)

# வர்த்தக நிலையத்தில் ஆணின் சடலம் மீட்பு

வவுனியா, மார்ச் 23

வவுனியா தோணிக்கல் ஆலயடி வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கடந்த சில நாட்களாக சுகவீனமுற்று காணப்பட்ட நிலையிலேயே நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தனது வர்த்தக நிலையத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரெ. நேசேந்திரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# 33 வயது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த கணவர் கைது!

கொழும்பு, மார்ச் 23

குடும்பத் தகராறு காரணமாக மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த சம்பவம் பிங்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பிங்கிரிய, தியகெலியாவ பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய பெண்ணாவார்.

குடும்பத் தகராறு காரணமாக கணவன் - மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் கணவர், மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரான 40 வயதுடைய கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிங்கிரிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஈழத்தமிழர்கள் விடயத்தில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டும்

## ஜனநாயகப் போராளிகள் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 23

ஈழத்தமிழர்களின் விடயத்தில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் கோரிக்கை விடுத்துள்ளார்.


அவ்வாறு இல்லையெனில் அது இந்தியாவிற்கே ஆபத்தாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் அமெரிக்கா - சீனா போன்ற நாடுகளின் நகர்வுகள் இலங்கையைக் குறி வைக்கின்றன.

அதற்கு இந்தியா பலிக்கடாவாக ஆகக்கூடாது.

இலங்கையைக் கையாள்வதற்கு இந்தியாவிற்கு ஒரே ஒரு வழியே உள்ளது. அது ஈழத்தமிர்களை விட வேறு வழியில்லை.



கடந்த காலங்களில் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றி தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்று இந்தியா பல முயற்சிகளை மேற்கொண்டது.

தென்னிலங்கையில் பல நகர்வுகளை மேற்கொண்டது. ஆனால் அனைத்து நகர்வுகளும் முறியடிக்கப்பட்டு இன்று அமெரிக்கா சீனா போன்ற நாடுகளின் ஆதிக்கமே தென்னிலங்கையில் இருந்து வருகின்றது.

அந்த நாடுகள் தற்போது ஈழத்தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் தங்கள் நகர்வுகளை ஆரம்பித்திருக்கின்ற காரணத்தினால் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பகுதியில் பலம் வாய்ந்த சக்தியாக ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் சுயநிர்ணய உரிமையும், அரசியல் இருப்பும் இங்கு தக்க வைக்கப்படுமாக இருந்தால் அது இந்தியாவிற்கே பாதுகாப்பானதாக அமையும்.

இந்தியா தொடர்ச்சியாக இதே நிலைமையைக் கையாளுமாக இருந்தால் இலங்கையில் இந்தியாவிற்கான அனைத்து கதவுகளும் பூட்டப்பட்டு பாரியளவிலான பின்னடைவுகளை இந்தியா சந்திக்க நேரிடும்-என்றார்.

(அ)

ஈழநாடு



# கோட்டா பதவி துறக்க அவரேதான் காரணம்!

**தயான் ஜயதிலக்க விமர்சனம்**

கொழும்பு, மார்ச் 23

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து துரத்தியடிக்கப்பட்டமைக்கு அவர் தான் காரணமே தவிர வேறு யாரும் அவரை வெளியேற்றவில்லை என்று கலாநிதி தயான் ஜயதிலக்க விமர்சித்துள்ளார்.**



ஜனாதிபதி பதவியிலிருந்து தான் துரத்தப்பட்டமைக்குத் தமிழர்களும், முஸ்லிம்களும் அரகலய போராட்டத்தில் பங்கேற்றமையே காரணம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பில் கலாநிதி தயான் ஜயதிலக பதில் வழங்கியுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றில் கோட்டாபய ராஜபக்ச எழுதியுள்ள நூல் தொடர்பான விமர்சன உரையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரகலய போராட்டத்தில் பங்கேற்றவர்கள் சிங்கள - பௌத்த கிராமப்புற விவசாயிகளின் பிள்ளைகள். கோட்டாபயவின் திட்டங்கள் காரணமாக கிராமப்புறங்களிலிருந்த படையினரின் குடும்பங்களும் உறவினர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அந்த வகையில் கோட்டாபயவின் பதவி இறக்கத்துக்கு அவரே தான் காரணம். அவரை யாரும் வெளியேற்றவில்லை. ஆயுதமற்ற மக்கள் சக்தியின் மூலமே அவர் வெளியேற்றப்பட்டார்-என்றார். (அ)

# அவசர மருந்து கொள்வனவை முற்றாக நிறுத்த நடவடிக்கை



கொழும்பு, மார்ச் 23

அவசர மருந்து வாங்குவதை முற்றிலுமாக நிறுத்தி அதனை கொள்வனவு நடைமுறையின் ஊடாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

மருந்துகளின் தரம் தொடர்பான முழுப் பொறுப்பும் மருந்து மேற்பார்வையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த செயலாளர், புற்றுநோயாளிகளுக்கான தரமற்ற மருந்துகளை கொண்டு வருவது குறித்து விசேட குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்படும் மருந்துகளின் தரம் தொடர்பில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை எனவும், அவ்வாறான மருந்துகள் தரம் குறைந்ததாக இருக்க வாய்ப்பில்லை எனவும் செயலாளர் தெரிவித்தார். (அ)

# யாழில் வீடு புகுந்து தகராறில் ஈடுபட்ட ஆறு பேர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

தாவடி பகுதியில் வீடொன்றினுள் புகுந்து தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.



சம்பவ தினமான நேற்று முன் தினம் வீட்டின் உரிமையாளர், தனது வீட்டின் முன் நின்று தகராறில் ஈடுபடவேண்டாம் என குறித்த இளைஞர்களை அறிவுறுத்தியதால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து உரிமையாளருடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தகராறில் ஈடுபட்ட 06 பேரையும் கைது செய்துள்ளனர். (அ)

# யாழ்ப்பாண பிரபல பாடசாலை அதிபருக்கு எதிராக விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் அதிபருக்கு எதிராக யாழ்.கல்வி வலயம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

குறித்த பாடசாலைக்கும் , கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றுக்கும் இடையில் அண்மையில் துடுப்பாட்ட போட்டி நடைபெற்றது.

போட்டி நாட்களில் மாணவர்கள் உற்சாகமாக வீதிகளில் பாண்ட் வாத்தியம் இசைத்து ஆடி பாடி மகிழ்ந்தனர். அதன் போது அயலில் உள்ள பெண்கள் பாடசாலைகளின் முன்பாகவும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் பாடசாலை அதிபருக்கு தகவல் கிடைத்து, அவ்வாறு கொண்டாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களில் அடையாளம் காணப்பட்ட மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த அதிபர், பெற்றோர்களை பாடசாலைக்கு அழைத்து பிள்ளைகளுடன் அயல் பாடசாலைகளுக்கு சென்று சிரமதானப் பணிகளில் ஈடுபடுங்கள் எனப் பணித்துள்ளார்.

அதிபரின் பணிப்புரையை ஏற்று பெருமளவான பெற்றோர் தமது பிள்ளைகளுடன் சென்று அயல் பாடசாலைகளில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். அதிபரின் செயற்பாடு குறித்து வடமாகாண கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து வலய கல்வி பணிமனை விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசின் செயல்பாடுகளை 85 வீத மக்கள் ஏற்கவில்லை

**வெரிட்டி ரிசேர்ச் நிறுவனம் அறிவிப்பு**

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் 85 வீதமான மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என வெரிட்டி ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடும்போது பிப்ரவரி மாதத்தில் அரசாங்கத்தின் மீதான மக்களின் அங்கீகாரம் குறைந்துள்ளதாக சமீபத்திய ஆய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒக்ரோபர் மாதத்தில் 9 சதவீதமாக இருந்த அரசாங்கத்தின் மீதான மக்களின் அங்கீகாரம் பெப்ரவரியில் 7 சதவீதமாகக் குறைந்துள்ளதாக வெரிட்டி ரிசேர்ச் இன்ஸ்ரியூட் கூறியுள்ளது.

அத்துடன் நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்த நிலையில் இருப்பதாக 91 சதவீத மக்கள் கருதுவதாக சமீபத்திய ஆய்வு அறிக்கை தெரியவந்துள்ளது.

மேலும் நாட்டின் பொருளாதாரம் அழிந்து வருவதாக 90 சதவீதம் பேர் கூறியதாகவும், 9 சதவீதம் பேர் மட்டுமே நாட்டின் பொருளாதாரம் சிறப்பான அளவில் இருப்பதாக கூறியதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ)

# கோப் தலைமைப் பதவியிலிருந்து ஒருபோதும் விலகப் போவதில்லை

**கூறுகிறார் ரோஹித அபேகுணவர்தன**

கொழும்பு, மார்ச் 23

கோப் குழுவின் தலைமைப் பதவியிலிருந்து விலகப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அண்மையில் கோப் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தனவை நியமித்தது.

இந்த நியமனத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு குழுவின் உறுப்பினர்கள் பலர் பதவி விலகியுள்ளனர்.

இவ்வாறான ஓர் பின்னணியிலும் தாம் பதவி விலகப் போவதில்லை என ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை வாக்குகளினால் தாம் இந்தப் பதவிக்கு தெரிவானதாகவும், அதனால் பதவி விலகும் உத்தேசமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமது நியமனம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு பிரச்னை இருந்தால் சஜித் பிரேமதாசவை குழுவின் பிரதிநிதியாக நியமித்து அவருக்கு தலைமைப் பதவியை வழங்க முடியும் என அவர் கூறினார். (அ)

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத 14 உணவகங்கள்

**174,000 தண்டம் விதிப்பு**

யாழ்ப்பாணம், மார்ச் 23

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த சில நாட்களாக சங்கானை பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர், வட்டுக்கோட்டை பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர், அராலி பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுழிபுரம் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தங்கள் பிரிவுகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது திகதி காலாவதியான உணவு பொருட்கள், பழுதடைந்த உணவு பொருட்கள், உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்கள் என 14 உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் சிக்கிக்கொண்டன.

மேற்படி 14 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக் கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிமன்றம், உணவக உரிமையாளர்களுக்கு 174,000 ரூபா தண்டம் விதித்தது டன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது. (அ)

# கழிவுத் தேயிலை அடங்கிய நான்கு கொள்கலன்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 23

சட்டவிரோதமான முறையில் ஏற்றுமதி செய்வதற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த கழிவுத் தேயிலை அடங்கிய 4 கொள்கலன்களை சுங்கத் திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த கொள்கலன்கள் தற்போது கொழும்பு டையின்கோ ஏற்றுமதி முனையத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் சீவலி அருக்கொட இதனைக் குறிப்பிட்டார். (அ)

# மட்டக்களப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் பிரபல சிவில் சமூக செயல்பாட்டாளர் பலி!

*மட்டக்களப்பு, மார்ச் 23*

**மட்டக்களப்பில் பிரபல சிவில் சமூக செயற்பாட்டாளரான சிறிபாலு கடந்த வியாழக்கிழமை செங்கலடி பதுளை வீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி பலியாகியுள்ளார்.**

செங்கலடி, கொம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த சிவில் செயல்பாட்டாளரான தம்பிநாயகம் சிறிபாலு (வயது-54) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி - பதுளை வீதியில் புலையவெளி என்ற இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்திலேயே இவர் பலியாகியுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களுக்காக நடைபெற்ற போராட்டங்கள் முதல் கொண்டு பல சிவில் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர் என்பதோடு மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பணியாற்றி வருகிறார்.

கரடியனாறு பகுதியில் இருந்து பதுளை வீதி வழியாக செங்கலடி நோக்கி தனது



மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனமொன்றுடன் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். (அ)

# நிந்தவூர் அல்-அஷ்ரகில் பாரம்பரிய மரங்கள் நடல்

*அம்பாறை, மார்ச் 23*

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் முன்னாள் அதிபர்களாகக் கடமையாற்றிய எஸ்.எச்.ஏ. அலியார் மற்றும் ஐ.எல். லத்தீப் ஆகியோர் பாடசாலைக்கு வருகை தந்து தற்போதைய அதிபர் ஏ .அப்துல் கபூரைச் சந்தித்து பாடசாலையின் தற்கால விடயங்கள் பற்றி கலந்துரையாடல் செய்தனர். அத்துடன் பாடசாலையின் நிந்தவூர் பாரம்பரியங்களை நினைவு கூருமுகமாக பல செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் முன்வந்தனர்.

அவ்வகையில் நிந்தவூரின் வரலாற்று பிரதிபலிப்பை நினைவு கூரத்தக்க பனிச்ச மரத்தையும், பெறுமதிமிக்க



கருங்காலி மரத்தையும் கொண்டு வந்து பாடசாலையில் நாட்டினர். (அ)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம்



*மட்டக்களப்பு, மார்ச் 23*

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் 2023 விழா மற்றும் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கலை கலாசார பீட மொழித்துறை ஏற்பாட்டில், துறைத் தலைவர் கலாநிதி ஶ்ரீகருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஜி. விக்னேஷ்வரன் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்விக் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி மனோகரன் அதிதி உரையாற்றியதுடன் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர் சதானந்தன், தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் மதிவேந்தன் பட்டதாரி கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கென்னடி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர். (அ)

## ஆசிரியர் இடமாற்ற பிரச்னை;

# ஆளுநர், கல்விப் பணிப்பாளரை சந்தித்து பேசினார் ஹரீஸ் எம்.பி.

*அம்பாறை, மார்ச் 23*

அண்மைய கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தின் காரணமாகவும் மற்றும் பல காரணங்களினாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படும் அபாயம் உள்ள அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையிலான சந்திப்பொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸுக்கும் இடையே நேற்று முன் தினம் ஆளுநர் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆசிரியர்களின் பிரச்னைகள், முக்கிய பாடங்களுக்கு பதிலாளின்றிய இடமாற்றம் நடைபெற்றதால் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, அம்பாறை மாவட்ட பாடசாலைகளின் உள்ள ஆளணி விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்



பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு விளக்கினார்.

சகல பிரச்னைகளையும் கேட்டறிந்த ஆளுநர் அதனையடுத்து கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து பிரச்னைகளுக்கு தீர்வை வழங்குமாறும், குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸுடன் கலந்துரையாடுமாறும், அடுத்த வார ஆரம்பத்தில் இது தொடர்பில் எடுத்த நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

அதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலந்திரகுமார் ஆகியோர்களுக்குமிடையில் இது சம்பந்தமான சந்திப் போன்று கல்முனை மாநகர சபை காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது முக்கிய பாடங்களுக்கு பதிலாளின்றிய இடமாற்றம் நடைபெற்றதால் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, அம்பாறை மாவட்ட பாடசாலைகளின் உள்ள ஆளணி விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு விளக்கினார். இதன்போது அங்கு கலந்து கொண்டிருந்த கல்முனை கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர் வரணியா சாந்தரூபன் புள்ளிவிபரங்களுடன் கல்முனை கல்வி வலய ஆசிரியர் நிலைகளை விளக்கி பாடசாலைகள் பாதிக்கப்பட்ட விடயங்களை தெளிவுபடுத்தினார்.

சகல விடயங்களையும் ஆராய்ந்துணர்ந்த கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உடனடியாக இந்த பிரச்னைகளை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (அ)

# கல்முனையில் முப்பெருவிழா

*கல்முனை, மார்ச் 23*

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் முப்பெரு விழா கல்வி அலுவலக கல்விசார் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.றாஸிக் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வு பெற்றுச் செல்லும் கல்முனை தமிழ் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே.தாஸிம் ஆகியோருக்கான பணி நயப்பு , கல்முனை கல்வி வலயத்திற்கான அடையாள அட்டை விநியோகம், கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான மேலங்கி வெளியீடு ஆகிய மூன்று நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பிரதிக் கல்விப்



பணிப்பாளர்களான எம்.எச். எம்.ஜாபிர், ஜிஹானா ஆலிப், ஆசிரிய ஆலோசகர் திருமதி நஜிமுன்நிஸா ஆகியோர் சிறப்புரையாற்றினர்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்,வளவாளர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆசிரிய ஆலோசகர் கே.சாந்தக்குமார் நிகழ்வை நெறிப்படுத்தினார். நன்றியுரையினை தமிழ்ப் பாட ஆசிரிய வளவாளர் ஜெஸ்மி மூஸா நிகழ்த்தினார். (அ)

# மட்டக்களப்பில் மாணவர் பாராளுமன்ற அமர்வு

*மட்டக்களப்பு, மார்ச் 23*

மட்டக்களப்பு அமிர்தகழி ஶ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற மாணவர் பாராளுமன்ற தேர்தலை தொடர்ந்து, முதலாவது அமர்வு நேற்று முன் தினம் பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் வீ.முருகதாஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை மாணவ மாணவியருக்கு ஜனநாயக தொடர்பான நடைமுறை அனுபவங்களை பெற வாய்ப்பளித்து சட்டத்தின் முக்கியத்துவம், இணக்கப்பாடுகள், ஏனையோரின் கருத்துக்களை செவிமடுத்தல், மதித்தல் தொடர்பாகவும் பரந்துபட்ட தேசிய குறிக்கோள்களை இலக்காக கொண்டு, நிகழ்வு இடம்பெற்றது.

மண்முனை வடக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் ஆர்.ஜே பிரபாகரன், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் குருபரன், வலயக் கல்வி அலுவலக வளவாளர் ரமேஷ், பழைய மாணவர் சங்க தலைவி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர் பாராளுமன்ற தேர்தலின் முதலாவது அமர்வில் கலந்து கொண்டனர். (அ)

ஈழநாடு



# பலஸ்தீனத்துக்கு எதிரான போரில் பட்டினியை ஆயுதமாக்கும் இஸ்ரேல்!

## ஐ.நா. குற்றச்சாட்டு



**ஜெனிவா, மார்ச் 23**

**பலஸ்தீனம் மீதான போரில், பட்டினியை ஆயுதமாக இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்துவதாக ஐ.நா குற்றம்சாட்டியுள்ளது.**

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில் இதுவரை சுமார் 30,000க்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் இப்போரினால் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நாடுகளால் அனுப்பப்படும் உணவு, மருந்து பொருட்களையும் அவர்களுக்கு கிடைக்க விடாமல் இஸ்ரேல் இராணுவம் தடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து விசாரித்து வந்த சர்வதேச நீதிமன்றம், காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கிட இஸ்ரேல் குறுக்கே நிற்கக்கூடாது என உத்தரவிட்டிருந்த போதும் இஸ்ரேல் அதனை கடைபிடிப்பதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அம்மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இப்போரில் பட்டினியை இஸ்ரேல் அரசு ஆயுதமாகப் பயன்படுத்துவதாக ஐநா குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனிதாபிமான உதவிகளை வழங்க இஸ்ரேல் அனுமதி வழங்கவேண்டும்

## அவுஸ்திரேலியா, பிரிட்டன் கூட்டாக வேண்டுகோள்


*லண்டன், மார்ச் 23*

மனிதாபிமான உதவிகள் காசாவை சென்றடைவதை இஸ்ரேல்உறுதி செய்யவேண்டும் என அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

அவுஸ்திரேலிய-இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர் நிரந்தர பேண்தகு யுத்தநிறுத்தத்தை உருவாக்குவதற்கு உடனடி யுத்தநிறுத்தம் அவசியம் எனவும் இரு நாடுகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இரண்டு நாடுகளும் கூட்டாக அறிக்கையொன்றை விடுத்துள்ளன.

காசாவில் காணப்படும் பேரழிவு மனிதாபிமான நிலவரம் குறித்து அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் கவலை வெளியிட்டுள்ளன.



ஒக்ரோபர் ஏழாம் திகதி தாக்குதலை கண்டித்துள்ள அவுஸ்திரேலியா, பிரிட்டன் இந்த தாக்குதல் அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்துள்ளதுடன் பாலியல் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளன.

அனைத்து தரப்பினரும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் வரையறைக்குள் செயற்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவுஸ்திரேலியாவும் பிரிட்டனும், உடனடி யுத்தநிறுத்தம் நிபந்தனையற்ற பயணக்கைதிகள் விடுதலை பொதுமக்களை அனைத்து சந்தர்ப்பத்திலும் பாதுகாத்தல் என்பவற்றிற்கான வேண்டுகோளையும் விடுத்துள்ளன.(அ)

# டில்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் கைது!

*புதுடில்லி, மார்ச் 23*

இந்தியாவின் பிரபல எதிர்க்கட்சி அரசியல்வாதியும், டில்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், இந்தியாவின் நிதிக் குற்ற முகவரகத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மது விற்பனை கொள்கைகள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரவிந்த் கெஜ்ரிவால் எந்த தவறும் செய்யவில்லை என அவரது கட்சியான ஆம் ஆத்மி கட்சி மறுத்து வருகிறது.

இந்த வழக்கு அரசியல் உள்நோக்கம் கொண்டது எனவும் அந்த கட்சியினர் தெரிவிக்கின்றனர்.



இந்தியாவில் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்பு அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் வீட்டை நிதிக் குற்ற முகவரகத்தினர் சோதனை செய்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பங்களாதேஷ் கப்பல் கப்டன் பணயக் கைதியாகப் பிடிப்பு!

## சோமாலிய கொள்ளையர்கள் அடாவடி

*டாக்கா, மார்ச் 23*

பங்களாதேஷிற்கு சொந்தமான சரக்கு கப்பல் ஒன்று சோமாலிய கடல் கொள்ளையர்களினால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்திய பெருங்கடலில் மேற்குப் பகுதியில் சோமாலிய கொள்ளையர் குறித்த கப்பலை வழிமறித்துள்ளனர்.

அதிவேக படகில் குறித்த கப்பலை நோக்கிப் பயணித்த கடல்கொள்ளையர்கள், அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் வானை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கப்பலின்




கெப்டன் மற்றும் இரண்டாம் தர அதிகாரி ஆகியோரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளதாக குறித்த கப்பலின் பிரதம அதிகாரி ஆதிக் உல் கான் கப்பல் உரிமையாளருக்கு குரல் பதிவு ஒன்றினை அனுப்பியுள்ளார்.

இதேவேளை கப்டனை மீட்கும் பணியினை கப்பல் உரிமையாளர் தொடங்கியுள்ளார்.

(அ)

# கந்தஹார் நகரில் குண்டுத் தாக்குதல்!

## 21 பேர் உயிரிழப்பு!!

*காபூல், மார்ச் 23*

தெற்கு ஆப்கானிஸ்தானின் கந்தஹார் நகரில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, குறித்த தாக்கதலில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இந்த தற்கொலைத் தாக்குதல் சுமார் 08:00 மணிக்கு நகர மையத்தில் அமைந்துள்ள வங்கியில் நடந்ததாக தலிபான்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த ஆண்டு ஆப்



கானிஸ்தானில் நடந்த மிகப்பெரிய தாக்குதலை தாங்கள் நடத்தியதாக எந்த குழுவும் இது வரை கூறவில்லை.

ஆப்கானிஸ்தான் அரசு ஊழியர்கள் சம்பளம் வாங்க வரிசையில் நின்று கொண்டிருந்த கிளையில் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இறந்தவர்கள் மற்றும் காயமடைந்த சுமார் 50 பேர் மிர்வாய்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமையும் குறிப்பித்தக்கது. (அ)

# மகனை இராணுவத் தளபதியாக நியமித்த உகண்டா ஜனாதிபதி!

*கம்பாலா, மார்ச் 23*

உகண்டா ஜனாதிபதி யோவேரி முசவேனி தன் மகனை அந்நாட்டின் இராணுவத் தளபதியாக நியமித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டு முதல் தடவையாக அதிகாரத்தைக் கைப்பற்றிய யோவேரி முசவேனி, 6 தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவாகியவர்.



தனக்கு பின் மகன் ஜெனரல் முஹூஸி கெய்ரேருகபாவை ஜனாதியாக்குவதற்கு முசவேனி தயாராகி வருகிறார் என ஊகங்கள் நிலவின.

இந்நிலையில், முஹூஸி கெய்னேருகபாவை இராணுவத் தளபதியாக ஜனாதிபதி முசவெனி நியமித்துள்ளார் என உகண்டா பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் 75 லட்சம் வாக்குகள் பெறுவார்

## ஐக்கிய மக்கள் சக்தி கணிப்பு




கொழும்பு, மார்ச் 23

**வடக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் இனவாதக் கட்சிகளுக்கு வாக்களிக்கமாட்டார்கள், எனவே, இனவாதிகள் இல்லாத கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச 75 லட்சம் வாக்குகளைப் பெறுவார் என தெரியவந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அலை இருக்கின்றது எனக் கூறப்பட்டாலும் தற்போதுள்ள வாக்குவங்கியை விட சற்று கூடுதல் வாக்கு அக்கட்சிக்கு கிடைக்கும். சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வாக்குவங்கி 10 விகிதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

வடக்கிலும் எமக்கே ஆதரவு உள்ளது. இனவாத கட்சிகளுக்கு அம்மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். எமது அணியில் இனவாதிகள் இல்லை. சஜித் இனவாதம் அற்ற தலைவர். அனைத்து இனத்தவர்களும் அங்கம்வகிக்ககூடிய கட்சி எமது கட்சியாகும்.

அதேவேளை, அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டாலும் கூட்டணியாக எதிர்கொள்வதற்கு செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# கசிப்புடன் ஒருவர் கைது!



முல்லைத்தீவு, மார்ச் 23

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு -உடையார்கட்டு பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த 31 வயதான நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நபரிடமிருந்து 160 சிறு சிறு பொதிகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த 16 லீற்றர் சட்டவிரோத கசிப்பு பைக்கெற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபரை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**நிகழ்நிலை காப்பு சட்டமூலம்:**

# தள்ளுபடி செய்யப்பட்ட மனுவை மீண்டும் விசாரிக்கக் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 23

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை சட்டமாக்கும் போது, சபாநாயகர் செயற்பட்ட விதத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை புதிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்.

இந்த மனு கடந்த பெப்ரவரி 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

சட்ட மா அதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகி முன்வைத்த அடிப்படை ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்டு இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளமையினால், அதனை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சட்டமா அதிபர் இதன் போது தெரிவித்தார்.

அதன்படி, மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்ய நீதியரசர்கள் தீர்மானித்தனர்.

இந்நிலையில், உரிய முறையில் விடயங்களை ஆராயமல் குறித்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக, அந்த மனுவை இன்று மீண்டும் சமர்ப்பித்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனுவை மீண்டும் மற்றுமொரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறு மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்திடம் கோரினார். (அ)

# மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் அத்தியாவசிய உணவுப்பொருட்கள்

## இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத்



கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாயமான விலையில் தட்டுப்பாடு இன்றி பெற்றுக் கொள்ளக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் தெரிவித்தார்.

விவசாயி மற்றும் நுகர்வோர் ஆகிய இருவரையும் பாதுகாக்கும் முறைமையின் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாய அமைச்சின் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கான சூழல் தற்போது தயாராகியுள்ளது. நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல ஒரு முறைமை தயாராகி வருகிறது. அண்மைய காலமாக காய்கறிகள், பழங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. விவசாய அமைச்சு என்ற வகையில், காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி, சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலையை பழைய நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி பயிர் சேதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களின் புரதத் தேவைக்காக இறைச்சி மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்து நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை விவசாய அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. கால்நடை உற்பத்தியை அதிகரிக்க சுகாதார திணைக்களம் மற்றும் 09 மாகாண சபைகள் இணைந்து கால்நடை வளர்ப்பின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

மேலும், பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க 06 தொழிற்சாலைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் இது வரை 03 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. வீழ்ச்சியடைந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். அந்த நாடு இன்று மக்கள் வாழக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை மூலம் நுகர்வுக்கு தேவையான அரிசியை உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

இதன்படி அடுத்த மாதம் 6 ஆம் திகதி தேசிய புத்தரிசி விழாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஸ்ரீ மஹா போதி முன்னிலையில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன-என்றார். (அ)

# பெப்ரவரியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 4.5 பில்லியன் டொலர்களாக உயர்வு!

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் 2 ஆவது மீளாய்வுக் கூட்டத்தை நிறைவு செய்யும் வகையில், இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையில் பொருளாதார கொள்கைகள் தொடர்பிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழு பிரதானி பீற்றர் ப்ரூயர் தெரிவித்தார்.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் இரண்டாவது மீளாய்வு நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை மத்திய வங்கியில் நேற்று முன்தினம் பிற்பகல் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழுவினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையினால் அமுல்படுத்தப்பட்ட சீர்திருத்த வேலைத்திட்டத்தின் மூலம் கிடைத்துள்ள பெறுபேறுகள் போற்றத்தக்கவை எனவும், இதன்மூலம் வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்து வருவதாகவும் பீற்றர் ப்ரூயர் தெரிவித்தார்.

இலங்கை அமுல்படுத்தியிருக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்கான வேலைத் திட்டத்தின் பிரதிபலன்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளதென சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் பணவீக்கம் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக குறைந்துள்ளதாகவும், அதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியதெனவும் தெரிவித்தார். (அ)

## சிங்கள...

துண்டிக்கும் விதமாக இந்தப் பகுதியை அநுராதபுரத்துடன் இணைத்து தனி மாவட்டமாக அறிவிக் கவும் முயற்சிகள் இடம்பெற்றன - இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மணலாறு பிரதேசத்தை சேர்ந்தவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து காணிகளை வழங்கியமை பல தரப்பினரிடையேயும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## யாழுக்கு...

நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. இருப்பினும் இந்த மறுசீரமைப்புகள் தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக தீர்மானங்கள் எடுக்கப்பட வில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தனது யாழ்ப்பாண விஜயத்தில் அங்கஜன் ராமநாதன் கூட இருப்பார் என்றும், உத்தியோகபூர்வ நியமனங்கள் வழங்குவதற்கு முன்னர் எதிர்ப்புகள் காணப்படுமாயின் அவை கருத்தில் கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.தே.க. முக்கியஸ்தர் ரவி கருணாநாயாக்க அருண் சித்தார்த் என்பவரை ஐ.தே.கவின் யாழ். மாவட்ட அமைப்பாளராக அறிவித்தார் என செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மன்னாரில்...

அத்துடன், சித்திரை புத்தாண்டை இலக்காகக் கொண்டு ஏழ்மை மற்றும் குறைந்த வருமானம் பெறும் 27 இலட்சம் குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாவட்ட மட்டத்தில் 85 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய ஆயிரத்து 100 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை ஆற்றிய உரையிலேயேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாயத்துறையில் கொள்கை ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதால் தோற்றம்பெற்ற நெருக்கடியை அனைவரும் நன்கு அறிவோம். இதனை விவாதிக்கப் போவதில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் விவசாயத் துறை மேம்படுத்த விசேட நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விவசாயத்துறையை நவீனமயப்படுத்தாவிட்டால் எதிர்காலத்திலும் விவசாயத் துறை பெரும் எதிர்விளைவுகளை எதிர் கொள்ளும். விவசாயத்துறையை நவீன மயப்படுத்த உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. விவசாயத்துறை மேம் பாடு தொடர்பில் துறைசார் தரப்பினரு டன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.

2022 ஆம் ஆண்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக மட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு முன்னோக்கி செல்ல வேண்டும். நெல் கொள்வனவுக்கு விவசாயத்துறை அமைச்சு மானியம் கோரியுள்ளது. உரிய நேரத்தில் நிதி ஒதுக்கப்படும். பெரும் போக விவசாயத்தில் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக முன்னேற்றமடையும் போது அதன் பயன் நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும். ரூபாயின் பெறுமதி உயர்வடைந்துள்ளது. ஆகவே, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளை குறைக்குமாறு வர்த்தகத்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது . புத்தாண்டு காலப்பகுதியில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் - என்றார். (ஐ)

## அவசர...

ப. சத்தியலிங்கத்தின் முயற்சியால் இந்தக் கட்டடத்துக்கு 2019ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சாகல ரட்நாயக்க, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ-02)

## எந்த...

அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளர்.

"விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளோம். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகத்தை தெரிவு செய்துள்ளோம். இது யாழ்ப்பாணத்தில் கோப்பாயில் செய்யப்படுகிறது. இதன் மூலம் இந்த மாகாணம் நவீன விவசாயத்தைப் பெறுகிறது. அதே சமயம் வருமானமும் அதிகரிக்கிறது.

யுத்தத்தின் பின்னர் பெருமளவிலான காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் எடுக்கப்பட வேண்டியிருந்தது. இதுவரை 31 ஆயிரம் ஏக்கர் அரச காணிகளையும், 24 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகளையும் அரசாங்கம் விடுவித்துள்ளது. மொத்தம் 63 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த ஆயிரத்து 800 ஏக்கர் அரச காணி, 856 ஏக்கர் தனியார் காணி விடுவிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 2 ஆயிரத்து 600 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 600 ஏக்கர் அரச காணிகளையும் 68 ஏக்கர் தனியார் காணிகளையும் விமானப் படை விடுவித்துள் ளது. மேலும், சில நாட்களுக்கு முன்னர், 101 ஏக்கர் காணி மக்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்று (நேற்று) 234 ஏக்கர் கொடுக்கப்பட்டுள் ளது.

மேலும், பல கிராமங்களைச் சேர்ந்த நிலங்களுக்கு வனப் பாதுகாப்புத் துறையினர் வனப் பாதுகாப்புப் பகுதிகள் என பெயரிட்டிருந்தனர். 1985 வரைபடத்தின்படி, செயல்பாடுகளை தொடர அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

முன்னதாக இந்த இடத்தின் காணி உரிமையாளர்களும் படையினரும் இணைந்து பலாலி ஸ்மார்ட் விவசாய திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த காணிகள் அனைத்தும் நவீன விவசாயத் திட்டத்தில் மீண்டும் உரிமையாளர்களால் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம். இதை அவர்களால் தனியாக செய்ய முடி யாது என்பதால், அவர்களுக்குத் தேவை யான ஆதரவை வழங்க முப்படைகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

வடக்கில் புதிய வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றோம். யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட பிரச்னைகளை நாம் தற்போது தீர்த்து வருகின்றோம். நாங்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆரம்பித்தோம். அதனுடன் நாம் மட்டுப்படுத்தவில்லை. மக்களை பாதிக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். மேலும் அவர்களின் வருமான மூலங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே, இந்த மாகாணத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கி வருகிறோம்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை விவசாயத்தை ஊக்குவிக்கவும் இந்த மாகாணத்தில் உள்ள சூரிய சக்தி மற்றும் காற்றாலை சக்தியை பயன்படுத் தவும் திட்டமிட்டுள்ளோம். அதற்கு இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. இதன் மூலம் சுற்றுலா தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலையும் ஊக்குவிக்க முடிகிறது. மேலும், முதலீட்டு வலயங்களுக்கும் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஐந்து - பத்து வருடங்களில் இந்த செயல்பாடுகளை நடைமுறைப் படுத்தி வடக்குக்கு வலுவான பொருளாதாரத்தை வழங்குவதற்கு நாம் செயல்பட்டு வருகின்றோம். வடக்கை ஒரு பெரிய பொருளாதார மையமாக மாற்ற நான் அனைவரையும் அழைக்கிறேன் - என்றார். (ஐ)

# கண்டாவளையில் யானைகளால் வாழ்வாதார பயிர்கள் அழிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 23

கண்டவளை பிரதேசத்தில் காட்டு யானைகளால் மக்களின் வாழ்வாதார பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி - கண்டாவளை - வெளிக் கண்டலில் மக்கள் குடியிருப்புகள் புகுந்த மூன்று காட்டு யானைகள் 7 தென்னை மரங்கள், 40இற்கும் மேற்பட்ட வாழை மரங்களை அழித்துள்ளன.

பல மணி நேரப் போராட்டத்தின் பின்னரே யானைகளை விரட்ட முடிந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், யானைகளை விரட்டுவதற்கு வசதியாக வனவளத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# வீட்டில் வைத்திருந்த துப்பாக்கி ரவைகளுடன் இராணுவ கோப்ரலும் மனைவியும் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 23

இராணுவ கோப்ரல் ஒருவரின் தனியார் வீட்டின் சமையலறையில் மறைத்து வைத்திருந்த ரி-56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 235 ரவைகளை கைப்பற்றியுள்ளதாக அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர் .

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் , வீட்டிலிருந்த இராணுவ கோப்ரலும் அவரது மனைவியும் தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## படைகளின்...

வலி.வடக்கில் காணி விடுவிப்பு, கையளிப்பு நிகழ்வில் பங்கேற்றார்.

இதன்போது, யாழ். படைகளின் வசமிருந்த 5 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த 234 ஏக்கர் காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக விசாயிகளிடம் வழங்கி வைத்தார். (ஐ)

## உயிர்த்த...

எனக்கு உத்தரவு பிறப்பித்தால் நான் அதுபற்றிய விபரங்களை வெளியிடுவேன். இதேநேரம், இந்தத் தகவலின் இரகசியத் தன்மையைப் பேணும் பொறுப்பு முற்றுமுழுதாக நீதிபதிகளுக்கே இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

கண்டியில் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தற்போது நாடும் நாட்டுமக்களும் மிகமோசமான நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கின்றனர். இதிலிருந்து மீட்சியடைய வேண்டுமெனில் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத்தேர்தலும் உரிய காலப்பகுதியில் நடத்தப்பட வேண்டும். இதனையடுத்து பொருளாதார நெருக்கடி யிலிருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுப்பதுடன் பொதுமக்கள் முகங்கொடுத்திருக்கும் பிரச்னைகளுக்கு உரியவாறான தீர்வை வழங்கவேண்டிய பொறுப்பை புதிய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும்" - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மன்னாரில்...

இதையடுத்து மாணவி ஓட்டோவை நிறுத்துமாறு கத்தியுள்ளார். ஆனால், அந்த நபர் ஓட்டோவை வேகமாக செலுத்த முற்பட்டுள்ளார். அந்தச் சமயம் மாணவி ஓட்டோவிலிருந்து குதித்ததில் கையில் பலத்த அடி ஏற்பட்டு, காயமடைந்தார்.

இதைத் தொடர்ந்து அங்கிருந்து தப்பிய அவர் அப்பகுதியில் நின்றவர்களிடம் கூறியுள்ளார். குறித்த ஓட்டோவை விரட்டிச் சென்றவர்கள் சந்தேகநபரை பிடித்தனர். இதன்போது, அந்த நபர் பெரும்பான்மை சமூகத்தவர்களின் மொழியில் பேசியுள்ளார். அவரை, மன்னார் பொலிஸாரிடம் அப்பகுதி மக்கள் ஒப்படைத்தனர்.

இதேவேளை, கடந்த புதன்கிழமையும் மாணவி ஒருவரை கடத்த எடுக்கப்பட்ட முயற்சி ஒன்று தடுக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

இதேநேரம், கடந்த 2023 நடுப் பகுதியில் சிறுவர்கள் கடத்தப்பட்ட - கடத்த முயற்சிக்கப்பட்ட சம்பவங்கள் பல இடம்பெற்றன. இது தொடர்பில் அரசாங்க அதிபரும் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையில், மன்னாரில் மீண்டும் சிறுவர்கள் குறிவைத்துக் கடத்தப்படுகின்றனரா என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. (ஐ)

## சிறுமியை...

இதனை அவர் ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் பாடசாலை நிர்வாகம் மூலமாக வவுனியா பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் சிறுமியை விசாரணை செய்தனர்.

தாய் இல்லாதபோது இடம்பெற்ற இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார். இதையடுத்து, அவரின் 36 வயதான தந்தை கைது செய்யப்பட்டார். சிறுமி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பாரிஸ்...

செலுத்துகை இடைநிறுத் தம் மற்றும் மீள்செலுத்துகை காலத்தில் வட்டிக் குறைப்பு என்பன இணக்கப் பாடுகளாக எட்டப்படவுள்ளன என்று இந்தியாவின் முன்னணி நாளிதழான தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இரு தரப்பு பேச்சுகள் தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளன. அதன்படி கடன்மறுசீரமைப்பு தொடர்பில் வெகுவிரைவில் உத்தியோகபூர்வ இணக்கப்பாடு எட்டப்படுமென எதிர்பார்க்கலாம் - என்றும் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து, அதன் நிபந்தனைகளுக்கு அமைவாக கடன்மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதனை இலகுபடுத்தும் நோக்கில் இலங்கைக்கு கடன்வழங்கிய 17 நாடுகள் இணைந்து "உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை" உருவாக்கின. இருப்பினும் சீனா அந்தக் குழுவில் இணைந்து கொள்ளாத போதிலும், அது தொடர்பான கூட்டங்களில் பார்வையாளராகப் பங்கேற்றது.

இதன் நீட்சியாக இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயல்திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு செயன்முறைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட மீளாய்வு குறித்து சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாட்டை எட்டியிருப்பதுடன், அதற்கு நாணய நிதிய இயக்குனர் சபையின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதன் பின்னர் இலங்கைக்கு மேலும் 33. 7 கோடி டொலர் கடன்நிதி விடுவிக்கப்படும் என்று ஐ.எம். எவ். அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# மாவீரர் நினைவேந்தல்கள் குறித்து முழுமையான விசாரணை அறிக்கை

## சமர்ப்பிக்க சட்டமா அதிபர் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 23

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இதுவரை நடத்தப்பட்ட மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.**

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தி, அவற்றை தடை செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி ஆனந்த ஜயமானவினால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த மனு எஸ். யு. பி. கரலியத்த மற்றும் மாயாதுன்னே கொரயா ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஷமிந்த விக்ரம இந்த அறிவித்தலை விடுத்தார்.

இந்த மனு கடந்த முறை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்ட மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த உள்ளதாக அரச சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

இதன்படி, குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் இவ்வாறான உறுதிமொழியை வழங்குவதால், இந்த மனுவை தொடரவேண்டிய அவசியமில்லை என மனுதாரரின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

இதன்படி மனுவை மீளப்பெற அனுமதிக்குமாறு மனுதாரரின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

அதன்போது நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சிரேஷ்ட சட்டத்தரணி, இதுவரை நடைபெற்ற மாவீரர் தினங்கள் தொடர்பாக பயங்கரவாத விசாரணை பிரிவினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனவே, குறித்த விசாரணைகளின் முழுமையான அறிக்கையை நீதிமன்றில் முன்வைக்க உள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவித்தார்.

அதன்பின்னர், இந்த மனுவை மீளப் பெறுவது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலிக்குமாறு அவர் நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

அதன்படி, உரிய விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம், அதன்பின்னர் மனுவை மீளப் பெறுவது தொடர்பான கோரிக்கையை பரிசீலிப்பதாக அறிவித்துள்ளது. (அ)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்த சதொச

கொழும்பு, மார்ச் 23

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு வழங்கப்படும் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

அதன்படி 12 பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் வாடிக்கையாளர்கள் இன்று முதல் புதிய விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்றும் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பெரிய வெங்காயம் 100 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 550 ரூபாவாகும்.

சிவப்பு கௌபி 52 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 998 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

வெள்ளை கௌபி 50 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1,100 ரூபாவாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாஸ்மதி அரிசி 20 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 650 ரூபாவாகவும்.

சிவப்பு வெங்காயம் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 350 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.


வெள்ளைச் சீனி 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 265 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்புச் சீனி 5 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 425 ரூபாவாகவும் சோயா மீட் 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 595 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

சிவப்பு அரிசி 2 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 168 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பண்டிகை காலத்தில் வழங்கப்படும் 4,500 மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் தற்போது 3,480 ரூபாய்க்கு அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# ஏ-9 வீதியில் டிப்பருடன் மோதி குறுக்காகப் புரண்டது பவுசர்!





யாழ்ப்பாணம், மார்ச் 23

மிருசுவில் பகுதியில் ஏ-9 வீதியில் டிப்பரும் எரிபொருள் பவுசரொன்றும் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதனால் சில மணி நேரம் வீதிப் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

இந்த விபத்தில் மோதுண்ட இரு வாகனங்களும் தடம் புரண்டு சரிந்து விழுந்தன.

விபத்து காரணமாக எரிபொருள் பவுசரில் இருந்த எரிபொருள் வீதி முழுவதும் சிந்திக் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸை எரிபொருள் தாங்கி முந்தி செல்ல முற்பட்டபோதே எதிரில் வந்த டிப்பருடன் மோதியது.

அதனையடுத்து, சாதுரியமாக செயற்பட்ட இ.போ.ச. சாரதி பஸ்ஸை ஓரமாக நிறுத்தியதால் எவ்விதமான உயிரிழப்புகளும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வேகமாக பரவும் டீனியா தொற்று

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் பூஞ்சையால் ஏற்படும் டீனியா எனும் சரும நோய் வேகமாக பரவி வருவதாக தோல் நோய் தொடர்பான விசேட வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் இந்த நோய் அதிகம் பரவி வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தோல் நோய் விசேட வைத்திய நிபுணர் ஜானக அகரவிட்ட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நோயின் பிரதான அறிகுறி அரிப்பு ஆகும். மேலும், சிவப்பு புள்ளிகள் தோன்றுதல் போன்ற அறிகுறி காணப்படும்.

அதிகளவில் தோல் சுருங்கும் இடங்களிலும் வியர்வை அதிகளவில் சேரும் இடங்களிலும் அதிகளவில் இது ஏற்படும். அக்குள், பாதங்கள் மற்றும் தலையிலும் இத்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

இது தொடுகை மூலம் பரவுகிறது, மேலும் சக ஊழியர்களிடையே பரவக்கூடும். இந்த நோயை சிகிச்சைகள் மூலம் முழுமையாக குணப்படுத்த முடியும் என்பதுடன், நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடவேண்டும் - என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் 5ஆம் திகதி?

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 28 அல்லது ஒக்ரோபர் 05 ஆம் திகதி நடத்தப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பதால் அதற்கு தயாராகுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழுவுக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய கூட்டணி அமைப்பதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி துரிதப்படுத்தியுள்ளது.

வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க ஆகியோர் இதற்கான பணிகளை முன்னெடுத்துவருகின்றனர் எனவும் அறியமுடிகின்றது. அத்துடன், வடக்கு, கிழக்கை ஒருங்கிணைக்கும் பொறுப்பு ரவி கருணாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை பெற்றுக்கொள்வதற்கு பொதுஜன பெரமுன கட்சியும் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. (அ)

# ஏப்ரல் இறுதி வரை வெப்பநிலை நீடிக்கும்

கொழும்பு, மார்ச் 23

வருடத்தின் ஏனைய நாட்களை விட இந்த நாட்களில் வெப்பநிலை ஒன்று அல்லது இரண்டு பாகை செல்சியஸ் அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த நிலை காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெப்பம் அதிகமாக இருக்கும் என்றும் ஏப்ரல் இறுதி வரை இதே நிலை நீடிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த நேரத்தில் வெப்பநிலை அசாதாரணமாக உயர்ந்துள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் திணைக்களம் கூறுகிறது. (அ)

# சீநோர் நிறுவனத்தின் தலைவர் பதவி விலகல்!

கொழும்பு, மார்ச் 23

அரசாங்கத்துக்கு உரித்தான படகு உற்பத்தி நிறுவனமான சீநோர் நிறுவனத்தின் தலைவர் துலான் ஹெட்டியாரச்சி தமது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவின் அச்சுறுத்தல்கள் காரணமாக அவர் தமது பதவியிலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கிணற்றில் வீழ்ந்து 3 வயது சிறுவன் பலி!

கொழும்பு, மார்ச் 23

வட்டவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பின்ஓய மேல் பகுதியில் சிறுவன் ஒருவன் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த நிலையில் குறித்த சிறுவன் கிணற்றில் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் 3 வயது சிறுவன் ஒருவரே உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தனஞ்சய, கமிந்து சதம் இலங்கை 280 ஓட்டங்கள்!

## பங்களாதேஷூம் தடுமாற்றம்



சியால்ஹெட், மார்ச் 23

பங்களாதேஷூக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ் ஆகியோரின் சதத்தின் உதவியால் 280 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இலங்கை அணி.

இலங்கை அணி பங்களாதேஷ் சென்று தொடர்களில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த இருபது - 20 தொடரில் இலங்கையும், ஒரு நாள் தொடரில் பங்களாதேஷ் அணிகளும் கைப்பற்றின.

இந்த நிலையில் இரு அணிகளும் மோதும் டெஸ்ட் தொடர் நேற்று தொடங்கியது. சியால் ஹெட் நகரில் ஆரம்பமான முதல் டெஸ்டில் நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இலங்கை அணி முதலில் களம் இறங்கியது. பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் நிஷான் மதுஷ்க (2), திமுத் கருணாரத்ன (17), குசால் மெண்டிஸ் (16), மத்தியூஸ் (5), சண்டிமால் (9) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் இலங்கை 57 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஐந்து விக்கெட்களை இழந்தது திணறியது. 6ஆவது விக்கெட்டுக்காக அணித்தலைவர் தனஞ்சய டி சில்வாவுடன் கமிந்து மெண்டிஸ் சேர்ந்தார். இந்த இணை இலங்கை அணியை சரிவில் இருந்து மீட்டது.

இருவரும் அபாரமாக விளையாடி சதம் விளாசினர். இந்த இணை 6ஆவது விக்கெட்டுக்காக 202 ஓட்டங்கள் குவித்தது. கமிந்து மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 102 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த பிரபாத் ஜெயசூர்யா (1), விஷ்வா பெர்னாண்டோ (9), லஹிரு குமார (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கை முதல் இன்னிங்ஸில் 68 ஓவர்கள் நிறைவில் 280 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது.

பங்களாதேஷ் அணி சார்பில் காலித் அகமது, நஹித் ராணா ஆகியோர் தலா மூன்று விக்கெட்கள் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷூம் தொடக்கத்திலேயே விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

தொடக்க வீரர்களில் ஒருவரான ஷகீர் ஹசன் 9, அணித்தலைவர் ஹூசைன் சான்டோ 5, மொமினுல் ஹக் 5 ஓட்டங்களுடன் விக்கெட்களை இழந்தனர். இதனால், நேற்று ஆட்டம் முடிவடைந்தபோது 10 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது அந்த அணி.

இலங்கையின் பந்துவீச்சில் விஸ்வ பெர்னாண்டோ 2, கசுன் ராஜித ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.



## ஐ. பி. எல். ரி-20 தொடரில் 2 பவுன்ஸருக்கு அனுமதி!


சென்னை, மார்ச் 23

ஐ. பி. எல். தொடரில் இம்முறை பந்து வீச்சாளர்கள் 2 பவுன்ஸர்களை வீச அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த தொடர்களில் ஒரு முறை மட்டு பவுன்ஸர் வீச அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இம்முறை விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் ஓவருக்கு ஒரு பவுன்ஸர் மட்டுமே வீச அனுமதி உண்டு. ஆனால், உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியன் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இந்த ஆண்டு சையது முஷ்தாக் அலிடி 20 தொடரில் 2 பவுன்ஸர்களை வீச அனுமதித்தது.

இதன் தொடர்ச்சியாக இந்த விதிமுறையை ஐ. பி. எல். தொடருக்கும் கொண்டுவந்துள்ளது. இதன் மூலம் இறுதிக்கட்ட ஓவர்களில் பந்து வீச்சாளர்கள் பவுன்ஸர்களை முக்கியமான ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடும். எந்த பந்து வீச்சாளரும் குறிப்பிட்ட துடுப்பாட்ட வீரரை குறிவைத்தும் செயல்பட முடியும். இந்த விதியுடன் களநடுவரால் ஸ்ரொம்ப் செய்ய பரிந்துரைக்கப்படும் போது பிடியெடுப்பை சரிபார்க்கும் விதியையும் ஐ. பி. எல். தொடரில் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.

## டோனி, ரோஹித், கோலி தலைவர் இல்லாத தொடர்!



புதுடில்லி, மார்ச் 23

ஐ. பி. எல். வரலாற்றில் டோனி, ரோஹித், விராட் கோலி ஆகியோரில் ஒருவர்கூட அணித் தலைவராக இல்லாத தொடராக இம்முறை தொடர் மாறியுள்ளது.

ஐ. பி. எல்லின் 17ஆவது தொடர் நேற்று ஆரம்பமானது. இந்தத் தொடர், ஐ. பி. எல். வரலாற்றில் டோனி, விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோரில் ஒருவர்கூட அணித்தலைவராக இல்லாத தொடராக இது அமைகிறது.

2008 முதல் கடந்த தொடர் வரை இந்த 3 பேரில் குறைந்தபட்சம் ஒருவராவது ஏதாவது ஓர் அணிக்கு தலைவராக செயல்பட்டுள்ளனர். ஆனால் இந்த முறை 3 பேரும் வீரராக மட்டுமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மியாமி ஓப்பன் ரென்னிஸ் அசரென்கா அடுத்த சுற்றில்

மியாமி, மார்ச் 23

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் விக்ரோறியா அசரென்கா, எலினா ரிபாகினா ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

மியாமி ஓப்பன் ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் கஜகஸ்தானின் எலீனா ரிபாகினா, டென்மார்க்கின் கிளாரா டாசனுடன் மோதினார்.

இதில் ரிபாகினா முதல் செற்றை இழந்தாலும் அடுத்த இரு செற்களையும் கைப்பற்றினார். இறுதியில் 3-6, 7-5, 6-4 என செற்களில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் பெலாரசின் விக்ரோறியா அசரென்கா, இங்கிலாந்தின் பெய்டன் ஸ்டீர்ன்சுடன் மோதினார். இதில் அசரென்கா 7-5, 3-6, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ஐ)






## மியாமி ஓப்பன் ரென்னிஸ் அண்டி முர்ரே முன்னேற்றம்

மியாமி, மார்ச் 23

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் அண்டி முர்ரே அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மியாமி ஓப்பன் ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இங்கிலாந்தின் அண்டி முர்ரே, இத்தாலியின் மேட்டியோ பிரெட்டனியுடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் அண்டி முர்ரே முதல் செற்றை 4-6 என இழந்தார். இதனால் சுதாகரித்த முர்ரே அடுத்த இரு செற்களை சிறப்பாக விளையாடி 6-3, 6-4 என கைப்பற்றினார். இதனால் அண்டி முர்ரே 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# ஐ. பி. எல்லில் சம்பியனாகும் அணிக்கு ரூ. 73 கோடி பரிசு?

சென்னை, மார்ச் 23

ஐ. பி. எல். தொடரில் இந்த ஆண்டும் சம்பியன் வெல்லும் அணிக்கு 20 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 73 கோடி ரூபாய் பரிசாக வழங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

ஐ. பி. எல். 17ஆவது தொடர் நேற்று ஆரம்பமானது. இதில், 10 அணிகள் பங்கேற்கின்றன.

இதில் ஓர் அணி, குறிப்பிட்ட 5 அணிகளுடன் தலா 2 முறையும், எஞ்சிய 4 அணிகளுடன் தலா ஒரு முறையும் மோத வேண்டும். இப்படி ஓர் அணி மொத்தம் 14 லீக் ஆட்டங்களில் விளையாட வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய (பிளே-ஓவ்) சுற்றுக்குள் நுழையும்.

இந்த நிலையில், ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில் இந்த ஆண்டுக்கான பரிசுத் தொகை விவரம் அதிகாரபூர்வமாக வெளி யிடப்படவில்லை. கடந்த ஆண்டு சம்பியன் வென்ற அணி 20 கோடி இந்திய ரூபாயும், 2ஆவது இடம் பிடித்த அணி 13 கோடி ரூபாயும் பரிசாக பெற்றன. இதே தொகைத்தான் இந்த ஆண்டும் வழங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும்,தொடரில் அதிக ஓட்டங்களை குவிக்கும் வீரருக்கு ஒரேஞ் நிற தொப்பியுடன் 15 இலட்சம் ரூபாயும், அதிக விக்கெட்கள் வீழ்த்தும் வீரருக்கு ஊதா நிற தொப்பியுடன் 15 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும். (ஐ)



# அரவிந்த் கெஜ்ரிவால் கைது: டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கு என்பது என்ன?

டெல்லி மதுபானக் கொள்கை முறைகேடு தொடர்பான விவகாரத்தில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவாலலை கைது செய்துள்ளது அமலாக்கத்துறை.

இந்த வழக்கில் ஏற்கெனவே மணீஷ் சிசோடியா, சத்யேந்திர குமார் ஜெயின் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது அரவிந்த் கேஜ்ரிவாலும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கு என்பது என்ன? அதன் பின்னணி குறித்து விளக்குகிறது இந்தக் கட்டுரை.

**சிபிஐ விசாரணையின் பின்னணி என்ன?**

டெல்லி தலைமைச் செயலாளர் நரேஷ் குமாரின் அளித்த அறிக்கையின் அடிப்படையில் சிபிஐ பதிவு செய்த எஃப்ஐஆரின் நகல் தான் இந்த விசாரணையின் மையப் புள்ளி.

மணீஷ் சிசோடியா மற்றும் 14 பேர் மீது 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது சிபிஐ. இதில் அப்போதைய கலால் துறை ஆணையர், மூன்று அதிகாரிகள், இரண்டு நிறுவனங்கள் மற்றும் ஒன்பது தொழிலதிபர்களும் அடங்குவர்.

புதிய மதுபானக் கொள்கை அமலுக்கு வந்த பிறகு, அரசின் கருவூலத்துக்கு நஷ்டம் ஏற்பட்டதாக சிபிஐ குற்றம் சாட்டியது. அதே வழக்கில், உரிமம் பெற்ற மதுபான விற்பனையாளர்களுக்கு நியாயமற்ற சலுகைகளை வழங்கும் நோக்கத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் புதிய மதுபானக் கொள்கையில் தன்னிச்சையான மாற்றங்களைச் செய்தனர் என்றும் கூறப்பட்டது.



சிசோடியாவின் நெருங்கிய கூட்டாளிகளான அமித் அரோரா, தினேஷ் அரோரா மற்றும் அர்ஜுன் பாண்டே ஆகியோர் (பட்டி ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள்) உரிமம் வைத்திருப்பவர்களிடம் இருந்து பணத்தைப் பெற்று, அதை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் அனுப்பியதாக எஃப்ஐஆர் கூறுகிறது.

**புதிய மதுக்கொள்கையில் நடந்த ஊழல் கண்டுபிடிக்கப்பட்டது எப்படி?**

ஜூலை 8, 2022 அன்று, துணைநிலை ஆளுநர் வினய் குமார் சக்சேனா (பொருளாதார குற்றப்பிரிவு), டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் மற்றும் மணீஷ் சிசோடியா ஆகியோருக்கு டெல்லி தலைமைச் செயலாளர் நரேஷ் குமார் அறிக்கை ஒன்றை அனுப்பினார்.



இந்த அறிக்கை பொதுக் களத்தில் வெளியிடப்படவில்லை. ஆனால் இந்தியன் எக்ஸ்பிரஸ், நியூஸ்லாண்ட்ரி போன்ற பல ஊடக நிறுவனங்கள் நம்பகமான ஆதாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டன.

அதன்படி கலால்துறையின் பொறுப்பாளராக இருக்கும் சிசோடியா, புதிய கலால் கொள்கையின் மூலம்



துணைநிலை ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் மோசடியாக வருவாய் ஈட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டது.

**தலைமைச் செயலாளர் அறிக்கையில் என்ன இருந்தது?**

அறிக்கையின்படி, "கொரோனாவின் போது மதுபான விற்பனையாளர்கள் உரிமக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய டெல்லி அரசாங்கத்தை அணுகினர். டிசம்பர் 28 முதல் ஜனவரி 27 வரை உரிமக் கட்டணத்தில் 24.02 சதவீத தள்ளுபடியை அரசு வழங்கியது.

இது உரிமதாரருக்கு அளவுக்கதிமான பலனை வழங்கியது, மேலும் கருவூலத்திற்கு சுமார் 144.36 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் கூற்றுப்படி, "நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கையில் கலால் துறை ஏதேனும் மாற்றங்களைச் செய்வதற்கு முன், முதலில் அதை அமைச்சரவைக்கும் பின்னர் துணைநிலை ஆளுநருக்கும் அனுமதிக்காக அனுப்ப வேண்டும். அமைச்சரவை மற்றும் துணைநிலை ஆளுநரின் அனுமதியின்றிச் செய்யப்படும் எந்த மாற்றமும் சட்டவிரோதமாக கருதப்படும்."

மணீஷ் சிசோடியா வெளிநாட்டு மதுபானங்களின் விலையை மாற்றியதாகவும், ஒரு பீருக்கான இறக்குமதி வரியான 50 ரூபாயை நீக்கியதன் மூலம் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு அளவுக்கு அதிமான லாபத்தை வழங்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

**30 கோடியை திருப்பிக் கொடுத்த கலால் துறை**

புதுச்சேரியைச் சேர்ந்த பிக்சி எண்டர்பிரைசஸ் பிரை



வேட் லிமிடெட் விமான நிலைய மண்டலத்தில் திறக்கப்படும் 10 மதுபானக் கடைகளுக்கான உரிமத்தைப் பெற்றுள்ளது, ஆனால் அந்த நிறுவனத்தால் விமான நிலைய அதிகாரிகளிடமிருந்து தடையில்லா சான்றிதழைப் பெற முடியவில்லை.

உரிம ஏலத்திற்காக டெபாசிட் செய்யப்பட்ட ரூபாய் 30 கோடியை அந்நிறுவனத்திடம் அரசு திருப்பி அளித்தது. இது டெல்லி கலால் வரி விதிகள், 2010ஐ மீறுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு விண்ணப்பதாரர் உரிமத்திற்கான சம்பிரதாயங்களை முடிக்கத் தவறினால், அவருடைய வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும். இதில் சிசோடியா கமிஷன் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டது, மேலும் இந்த பணம் பஞ்சாப் சட்டசபை தேர்தலில் பயன்படுத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது.

அறிக்கை கிடைத்த 15 நாட்களுக்குள் சிபிஐ விசாரணைக்கு பரிந்துரை செய்து உள்துறை அமைச்சகத்துக்கு துணைநிலை ஆளுநர் கடிதம் எழுதினார். இங்கிருந்துதான் சிபிஐ அமைப்பு இந்த முழு விஷயத்திலும் நுழைந்தன, இந்த விவகாரம் அரசியல் சாயலை எடுக்கத் தொடங்கியது.

பலகட்ட தாக்குதல்களுக்கு மத்தியில், ஜூலை 30, 2022 அன்று புதிய கலால் கொள்கையை திரும்பப் பெறுவதாக சிசோடியா அறிவித்தார், ஆனால் டெல்லியில் ஏற்கெனவே மதுபானக் கொள்கை இருந்தபோது, புதிய கொள்கையை அரசாங்கம் கொண்டு வந்தது ஏன்?

**புதிய கலால் கொள்கை என்றால் என்ன?**

கடந்த 2020ஆம் ஆண்டில், மது மாஃபியாவை ஒடுக்கி வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் டெல்லி அரசு புதிய மதுபானக் கொள்கையை முன்மொழிந்தது. நவம்பர் 17, 2021 அன்று, டெல்லியில் புதிய கலால் கொள்கை அமல்படுத்தப்பட்டது. புதிய கலால் கொள்கையின் கீழ், டெல்லி 32 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் 30 எம்சிடி, 1 என்டிஎம்சி மற்றும் கண்டோன்மென்ட் பகுதி, 1 டெல்லி விமான நிலைய மண்டலம் ஆகியவை அடங்கும். மண்டலத்திற்கு ஏற்ப மதுபானக் கடைகள் முடிவு செய்யப்பட்டன.

எம்சிடி மண்டலத்திற்கு 27 மதுபானக் கடைகளும், என்டிஎம்சி மற்றும் கண்டோன்மென்ட் பகுதியில் 29 மதுக்கடைகளும், டெல்லி விமான நிலைய மண்டலத்தில் 10 மதுக்கடைகளும் திறக்கப்பட உள்ளன. மது அருந்தும் வயது 25லிருந்து 21 ஆகக் குறைக்கப்பட்டது.

டெல்லி அரசு மது வணிகத்தில் இருந்து விலகி அனைத்து கடைகளையும் தனியாரிடம் ஒப்படைத்தது.

எல்1க்கான கட்டணம் (இந்திய மதுபானங்களின் மொத்த விற்பனைக்கான உரிமம்) 5 கோடி ரூபாயாகவும், எல்7க்கான கட்டணம் (தனியார் துறையில் இந்திய மதுபானங்களை சில்லறை விற்பனை செய்வதற்கான



உரிமம்) 11.18 கோடி ரூபாயாகவும் வைக்கப்பட்டது.

கட்டாய எம்ஆர்பிக்கு பதிலாக, மதுபானங்களின் விலையைத் தானே தீர்மானிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது.

புதிய மதுக்கடைகள் திறக்கப்படாது. ஹோட்டல்களில் உள்ள பார்கள், கிளப்புகள் மற்றும் உணவகங்கள் பிற்பகல் 3 மணி வரை திறந்திருக்க அனுமதிக்கப்பட்டது. புதிய கொள்கையின் பல விதிகள், தலைமைச் செயலர் தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பே அமல்படுத்தப்படாமல் இருந்தது. இதனால் டெல்லி மதுபானக் கொள்கை குறித்த சந்தேகம் எழுந்தது.

**வழக்கின் முழு விவரம் என்ன?**

செப்டம்பர் 04, 2020: புதிய மதுபானக் கொள்கை தொடர்பான பரிந்துரைகளுக்காக கலால் ஆணையர் ரவி தவான் தலைமையில் நிபுணர் குழுவை சிசோடியா அமைத்தார்.



அக்டோபர் 13, 2020: நிபுணர் குழு தனது அறிக்கையை டெல்லி அரசிடம் சமர்ப்பித்தது. அறிக்கை பொது தளத்தில் வைக்கப்பட்டது. 14 ஆயிரத்து 761 பேர் தங்கள் ஆலோசனைகளை அரசுக்கு அனுப்பியதாக அரசு கூறியது.

பிப்ரவரி 05 , 2021: முன்னாள் மதுபானக் கொள்கையின் அனைத்து அம்சங்கள், பங்குதாரர்கள் மற்றும்

(16ம் பக்கம் பார்க்க)

# திமுகவில் 11 எம்.பி.க்களுக்கு சீட் மறுப்பு, 9 புதுமுகங்களுக்கு வாய்ப்பு

முரளிதரன்
காசி விஸ்வநாதன்



2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.கவின் தேர்தல் அறிக்கையும் வேட்பாளர் பட்டியலும் புதன்கிழமையன்று வெளியிடப்பட்டது. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் அக்கட்சி 21 இடங்களில் போட்டியிடுகிறது. மீதமுள்ள 17 இடங்களில் விடுதலைச் சிறுத்தைகள், சி.பி.எம்., சி.பி.ஐ. ஆகியவை தலா இரண்டு இடங்களிலும் ம.தி.மு.க., கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி, இந்திய முஸ்லிம் லீக், ஆகியவை தலா ஒரு இடத்திலும் காங்கிரஸ் கட்சி ஒன்பது இடத்திலும் போட்டியிடுகிறது. புதுச்சேரி தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 21 இடங்களில் 10 இடங்களில் ஏற்கனவே வெற்றிபெற்ற வேட்பாளர்களே நிறுத்தப்பட்டுள்ளனர். 11 இடங்களுக்கு புதிய வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். வட சென்னையில் கலாநிதி வீராசாமி, தென் சென்னையில் தமிழச்சி தங்கபாண்டியன், மத்திய சென்னையில் தயாநிதி மாறன், அரக்கோணத்தில் ஜெகத்ரட்சகன், வேலூரில் கதிர் ஆனந்த், திருவண்ணாமலையில் சி.என். அண்ணாதுரை, நீலகிரி தனித் தொகுதியில் ஆ. ராசா, தூத்துக்குடியில் கனிமொழி, சிறிபெரும்புதூரில் டி.ஆர். பாலு, காஞ்சிபுரம் தனித் தொகுதியில் க. செல்வம் ஆகிய ஏற்கனவே இருந்த மக்களவை உறுப்பினர்களுக்கு மீண்டும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

தருமபுரி தொகுதியில் டாக்டர் செந்தில்குமாருக்குப் பதிலாக மணி என்பவருக்கும் சேலத்தில் எஸ்.ஆர். பார்த்திபனுக்குப் பதிலாக முன்னாள் அமைச்சர் செல்வகணபதிக்கும் கள்ளக்குறிச்சி தொகுதியில் கௌதம சிகாமணிக்குப் பதிலாக மலையரசனுக்கும் பொள்ளாச்சியில் கு. சண்முகசுந்தரத்திற்குப் பதிலாக ஈஸ்வரசாமிக்கும் தஞ்சாவூர் தொகுதியில் எஸ்.எஸ். பழனிமாணிக்கத்திற்குப் பதிலாக முரசொலி என்பவருக்கும் தென்காசி தனித் தொகுதியில் தனுஷ் எம். குமாருக்குப் பதிலாக ராணி சிறி குமாருக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த முறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அளிக்கப்பட்டிருந்த கோவை தொகுதியில் இந்த முறை தி.மு.கவின் சார்பில் கணபதி ராஜ்குமார் நிறுத்தப்பட்டிருக்கிறார். கடந்த முறை பெரம்பலூர் தொகுதி இந்திய ஜனநாயகக் கட்சிக்கு அளிக்கப்பட்ட நிலையில், அந்தக் கட்சி இந்த முறை பா.ஜ.க. கூட்டணியில் இணைந்திருக்கிறது. ஆகவே அந்தத் தொகுதியில் தி.மு.கவின் சார்பில் அருண் நேரு நிறுத்தப்பட்டிருக்கிறார்.

கடந்த முறை காங்கிரஸ் கட்சிக்கு அளிக்கப்பட்ட தேனி தொகுதியில் இந்த முறை தி.மு.கவின் சார்பில் முன்னாள் அமைச்சர் தங்க தமிழ்ச்செல்வன் போட்டியிடுகிறார். கடந்த முறை ம.தி.மு.கவின் கணேசமூர்த்தி போட்டியிட்ட ஈரோடு தொகுதியில் இந்த முறை தி.மு.கவின் சார்பில் பிரகாஷ் போட்டியிடுகிறார். கடந்த முறை காங்கிரசின் விஷ்ணு பிரசாத் போட்டியிட்ட ஆரணி தொகுதியில் இந்த முறை தி.மு.கவின் தரணிவேந்தன் போட்டியிடுகிறார்.

### தி.மு.கவின் புதிய முகங்கள் யார், அவர்கள் பின்னணி என்ன?

ஆ. மணி, தருமபுரி தொகுதி: தருமபுரி தொகுதியில் கடந்த முறை பா.ம.கவின் டாக்டர் அன்புமணி ராமதாஸை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றவர் டாக்டர் செந்தில்குமார். ட்விட்டரில் எளிதில் தொடர்பு கொள்ளக்கூடியவராக இருந்தாலும், இளைஞரணி நியமனம் குறித்து ட்விட்டரில் வெளிப்படையாகவே முரண்பட்டதை கட்சித் தலைமை பெரிதாக ரசிக்கவில்லை. அதனால், அவருக்கு இந்த முறை வாய்ப்புக் கிடைப்பது கடினம் என்ற நிலைதான் இருந்தது. எதிர்பார்த்தபடியே ஆ. மணி என்பவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

ஆ. மணி பாரம்பரியமான தி.மு.க. குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை கே. ஆரிமுத்து அண்ணாவின் காலத்தில் இருந்து தி.மு.கவில் இருந்தவர். மணி 1987ஆம் ஆண்டு முதல் தி.மு.க உறுப்பினராக இருந்து வருகிறார். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலோடு இணைந்து சட்டமன்ற இடைத் தேர்தலும் நடைபெற்றபோது இவருக்கு பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், அ.தி.மு.கவின் ஆ. கோவிந்தசாமியிடம் சுமார் 17 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இப்போது அவருக்கு நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தி.மு.கவின் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளராகவும் இருந்து வருகிறார் மணி.

ஈஸ்வரசாமி, பொள்ளாச்சி: 9 முறை அ.தி.மு.க. வென்ற தொகுதி இது. நீண்ட காலமாக அ.தி.மு.க. வசமே இருந்த அந்தத் தொகுதியை கடந்த 2019ஆம் ஆண்டுதான் தி.மு.க. கைப்பற்றியது. தி.மு.கவின் சார்பில் போட்டியிட்ட கு. சண்முகசுந்தரம் வெற்றிபெற்றார். ஆனால், இந்த முறை வேட்பாளரை மாற்ற தி.மு.க. தலைமை முடிவுசெய்ததால், அமைச்சர் சக்ரபாணிக்கு நெருக்கமானவராக அறியப்படும் ஈஸ்வரசாமிக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஈஸ்வரசாமி திருப்பூர் மாவட்டம் மைவாடி கிராமத்தைச் சேர்ந்தவர். 2006ல் தி.மு.கவைச் சேர்ந்த இவர் மடத்துக்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளராக இருந்தவர்.











முரசொலி, தஞ்சாவூர்: தி.மு.கவில் தஞ்சாவூர் தொகுதி என்றாலே எஸ்.எஸ். பழனிமாணிக்கம்தான். 1996ஆம் ஆண்டிலிருந்து ஆறு தேர்தல்களாக தொடர்ந்து வெற்றி பெற்று வருபவர் பழனி மாணிக்கம். 2004ல் இருந்து 2012வரை மத்திய நிதித் துறை இணை அமைச்சராகவும் இருந்தார் பழனி மாணிக்கம். இந்த முறையும் அவருக்கே வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், புதுமுகமான முரசொலியைக் களமிறக்கியிருக்கிறது தி.மு.க. தலைமை.

46 வயதாகும் முரசொலி தஞ்சாவூர் மாவட்டம் தென்னங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர். நீண்ட கால தி.மு.க. உறுப்பினர். 2014 முதல் 20வரை தி.மு.கவின் பொதுக் குழு உறுப்பினராக இருந்தவர். 2022ல் இருந்து தஞ்சாவூர் வடக்கு ஒன்றியச் செயலாளராக பதவிவகித்து வருகிறார்.

ராணி சிறிகுமார், தென்காசி - தனி: தென்காசி தனித் தொகுதியில் கடந்த முறை வெற்றிபெற்ற தனுஷ் எம். குமாருக்குப் பதிலாக இந்த முறை ராணி சிறி குமாருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியை தோற்கடித்து, தொகுதியைக் கைப்பற்றினார் தனுஷ் குமார். இருந்தபோதும் இந்த முறை வேட்பாளரை மாற்றியிருக்கிறது தி.மு.க. தலைமை. ராணி சிறி குமார் ஒரு மருத்துவர். மயக்க மருந்து நிபுணர். சங்கரன் கோவிலில் உள்ள மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார். 2002ஆம் ஆண்டில் இருந்து தி.மு.கவில் இருந்து வருகிறார்.

கணபதி பி. ராஜ்குமார், கோயம்புத்தூர்: கடந்த முறை தி.மு.க. கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பி.ஆர். நடராஜன் வெற்றிபெற்றிருந்தார். ஆனால், இந்த முறை இந்தத் தொகுதியை குறிவைத்து பா.ஜ.க. கடுமையாக வேலைபார்த்து வருவதால், தி.மு.கவே போட்டியிட முடிவுசெய்தது.

கணபதி பி. ராஜ்குமார் ஆரம்பத்தில் அ.தி.மு.கவில்தான் இருந்தார். கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேயராக இருந்த செ.ம. வேலுசாமி, ஒரு சர்ச்சையில் சிக்கி பதவி விலகினார். இதையடுத்து 2014ல் கோயம்புத்தூரின் மேயராக கணபதி பி. ராஜ்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆரம்பத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணிக்கு மிக நெருக்கமாக இருந்தவர். ஆனால், கணபதி பி. ராஜ்குமார் மேயராக இருந்த காலகட்டத்தில் இருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. 2016ல் ஜெயலலிதா மறைந்துவிட்ட நிலையில் அ.தி.மு.கவுக்குள் ஓரம்கட்டப்பட்டார் கணபதி பி. ராஜ்குமார்.

இதனால், 2020ஆம் ஆண்டு டிசம்பரில் தி.மு.கவில் இணைந்தார். முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நெருக்கமானவர் என்பதால், கோயம்புத்தூரின் மாநகர் மாவட்ட அவைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்போது கோவை நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

அருண் நேரு, பெரம்பலூர்: 2019ஆம் ஆண்டு தேர்தலில் பெரம்பலூர் தொகுதி இந்திய ஜனநாயகக் கட்சிக்கு அளிக்கப்பட்டது. அந்த கட்சி இந்த முறை பா.ஜ.கவுக்கு சென்றுவிட்ட நிலையில், இந்தத் தொகுதியில் தற்போது தி.மு.கவே போட்டியிடுகிறது. இந்தத் தொகுதியின் வேட்பாளராக அருண் நேரு அறிவிக்கப்பட்டிருக்கிறார். தி.மு.கவின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேருவின் மகன் இவர்.

அருண் நேரு அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் படித்தவர். கே.என். நேருவின் தொழில்களைக் கவனித்துவந்த இவர், நேரடி அரசியலில் ஈடுபடவில்லை. இருந்தாலும், அவ்வப்போது இவருக்கு வாழ்த்துத் தெரிவித்து திருச்சியில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுவந்தன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே இவர் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொகுதி ஐ.ஜே.கேவிற்கு அளிக்கப்பட்டதால், அருண் போட்டியிடவில்லை. தந்தை அமைச்சரான பிறகு பின்னணியில் அவருடைய வேலைகளைக் கவனித்துவந்தவருக்கு இப்போது வாய்ப்பளித்திருக்கிறது கட்சித் தலைமை.







கே.இ. பிரகாஷ், ஈரோடு: ஈரோடு தொகுதி கடந்த முறை ம.தி.மு.கவுக்கு அளிக்கப்பட்டிருந்தது. தற்போது ம.தி.மு.கவிற்கு திருச்சி தொகுதி அளிக்கப்பட்டிருப்பதால், தி.மு.க. இந்தத் தொகுதியில் போட்டியிடுகிறது. இந்தத் தொகுதியில் தி.மு.கவின் சார்பில் களமிறக்கப்பட்டிருக்கும் பிரகாஷ், தி.மு.க. இளைஞரணியைச் சேர்ந்தவர். மாநில இளைஞரணியின் துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகிப்பவர். இந்தத் தேர்தலில் தி.மு.க. இளைஞரணியிலிருந்து போட்டியிடும் ஒரே வேட்பாளரும் இவர்தான்.

பிரகாஷ் 2012லிருந்தே ஈரோடு மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக செயல்பட்டுவந்தவர். கடந்த ஆண்டு மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பொறுப்பு பிரகாசுக்கு வழங்கப்பட்டது. அமைச்சர் உதயநிதி தவிர, அன்பில் மகேஷ், எ.வ. வேலு ஆகியோருக்கும் நெருக்கம் என்பதால் இந்தத் தொகுதி பிரகாஷிற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

எம்.எஸ். தரணிவேந்தன், ஆரணி: ஆரணி தொகுதியில் கடந்த முறை காங்கிரசின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் விஷ்ணுபிரசாத். இந்த முறை இந்தத் தொகுதியை தி.மு.கவே எடுத்துக்கொண்டது. அந்தத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு தரணிவேந்தனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இவர் திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளராக இருந்து வருகிறார்.

மலையரசன், கள்ளக்குறிச்சி: முன்னாள் அமைச்சர் பொன்முடியின் மகன் கௌதம சிகாமணி போட்டியிட்டு வென்ற தொகுதி இது. இந்த முறை தி.மு.கவின் தியாகதுருகம் பேரூர் கழகச் செயலாளர் மலையரசனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயனின் தீவிர விசுவாசி என்பதால் இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறார் மலையரசன். அ.தி.மு.கவும் தே.மு.திகவும் கூட்டணி அமைத்தால், கள்ளக்குறிச்சி தொகுதி தே.மு.தி.கவுக்கு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கள்ளக்குறிச்சி தொகுதி தே.மு.தி.கவுக்கு அளிக்கப்படவில்லை. ஆகவே, இந்தத் தொகுதியில் அ.தி.மு.கவே போட்டியிடலாம். நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆறு சட்டமன்றத் தொகுதிகளில், ரிஷிவந்தியம், சங்கராபுரம் மட்டுமே தி.மு.க. வசம் உள்ளது அதனால் இந்தத் தொகுதியில் போட்டி கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அறிந்த முகங்கள், புதிய வாய்ப்பு

புதிய முகங்கள் போக, ஏற்கனவே அரசியல் களத்தில் நன்கு அறிமுகமான இருவருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் புதிதாக போட்டியிடும் வாய்ப்பை அளித்திருக்கிறது அக்கட்சி. அந்த வாய்ப்பைப் பெற்ற

(16ம் பக்கம் பார்க்க)

# அரவிந்த் கேஜ்ரிவால் கைது:

(14ம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்களின் கருத்து ஆகியவற்றை ஆழமாக ஆய்வு செய்வதற்காக துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் சத்யேந்தர் ஜெயின் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் கைலாஷ் கெலாட் ஆகியோர் தலைமையில் அமைச்சர்கள் குழுவை டெல்லி அரசு அமைத்தது.

*மார்ச் 22, 2021:* சிசோடியா தலைமையிலான இந்தக் குழு தனது பரிந்துரைகளை மாநில அமைச்சரவையில் சமர்ப்பித்தது. புதிய கலால் கொள்கை அங்கீகரிக்கப்பட்டது.

*ஏப்ரல் 15, 2021:* அப்போதைய துணைநிலை ஆளுநர் அனில் பைஜாலுக்கு அனுப்பப்பட்டது. சில ஆலோசனைகளை வழங்கிய அவர், கொள்கையை மறுபரிசீலனை செய்து உரிய திருத்தங்களைச் செய்யுமாறு அரசுக்கு அறிவுறுத்தினார்.

*நவம்பர் 17, 2021:* டெல்லி அரசாங்கம் பரிந்துரைகளைப் பின்பற்றி புதிய கலால் கொள்கையை அமல்படுத்தியது.

*ஜூலை 8, 2022:* டெல்லி தலைமைச் செயலாளர் நரேஷ் குமார், துணைநிலை ஆளுநர் வினய் குமார் சக்சேனா, அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் மணீஷ் சிசோடியா ஆகியோரிடம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்.

சிசோடியா மதுபான விற்பனையாளர் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு 'கமிஷன்' மற்றும் 'லஞ்சம்' ஈடாக தேவையற்ற உதவிகளை வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. தலைமைச் செயலாளர் பொருளாதார குற்றப் பிரிவுக்கும் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

*ஜூலை 22, 2022:* துணைநிலை ஆளுநர், உள்துறை அமைச்சகத்திற்கு சிபிஐ விசாரணைக்கு பரிந்துரை செய்து கடிதம் எழுதினார்.

*ஜூலை 30, 2022:* புதிய கலால் கொள்கையை திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பு. அடுத்த ஆறு மாதங்களுக்கு பழைய மதுபானக் கொள்கையை மீண்டும் அமுல்படுத்தப்பட்டது.

*ஆகஸ்ட் 6, 2022:* புதிய கலால் கொள்கையை அமுல்படுத்துவதில் அலட்சியம் காட்டியதற்காக முன்னாள் கலால் ஆணையர் ஆரவ் கோபி கிருஷ்ணா உட்பட டெல்லியின் கலால் துறையின் 11 கலால் அதிகாரிகளை துணைநிலை ஆளுநர் வினய் சக்சேனா இடைநீக்கம் செய்தார்.

*ஆகஸ்ட் 7, 2022:* சிசோடியா மற்றும் 14 பேர் மீது சிபிஐ எஃப்ஐஆர் பதிவு செய்தது. இவர்களில் அப்போதைய கலால் ஆணையர் உட்பட மூன்று அதிகாரிகள் அடங்குவர். அவர்கள் மீது கிரிமினல் சதி மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

*ஆகஸ்ட் 19, 2022:* சிசோடியா வீட்டில் சிபிஐ சோதனை. ஏழு மாநிலங்களில் மொத்தம் 21 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது.

*ஆகஸ்ட் 23, 2022:* டெல்லியின் கலால் கொள்கையில் பணமோசடி குறித்து அமலாக்கத்துறை வழக்கு பதிவு செய்ததாக அதன் அதிகாரப்பூர்வ ஆதாரங்களை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் பிடிஐ தெரிவித்தது.

*செப்டம்பர் 28, 2022:* இண்டோஸ்பிரிட் நிர்வாக இயக்குநர் சமீர் மகேந்திரு, தொழிலதிபர் மற்றும் ஆம் ஆத்மி கட்சி அதிகாரி விஜய் நாயர் ஆகியோர் அமலாத்துறையால் கைது செய்யப்பட்டனர்.

*அக்டோபர் 8, 2022:* டெல்லி, ஹைதராபாத் மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட 35 இடங்களில் அமலாத்துறை சோதனை நடத்தியது.

*அக்டோபர் 10, 2022:* மதுபான வியாபாரி அபிஷேக் போயின்பாலியை சிபிஐ கைது செய்தது.

*மார்ச் 21, 2024:* டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவால் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார். ●

# திமுகவில் 11 எம்.பி.க்களுக்கு...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

தங்க தமிழ்ச்செல்வன், செல்வகணபதி ஆகிய இருவருமே அ.தி.மு.கவிலிருந்து தி.மு.கவிற்கு வந்தவர்கள்.

தங்க தமிழ்ச் செல்வன், தேனி: 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி தோல்வியடைந்த ஒரே இடம் தேனி தொகுதிதான். இந்த முறை இந்தத் தொகுதியில் காங்கிரஸ் போட்டியிட்ட நிலையில், இந்த முறை தி.மு.கவே போட்டியிடுகிறது. தங்க தமிழ்ச்செல்வனுக்கு வாய்ப்பளித்திருக்கிறது தி.மு.க. தலைமை.

தங்கதமிழ்ச் செல்வன், 2001, 2011, 2016 என மூன்று முறை தமிழக சட்டமன்றத்திற்கு அ.தி.மு.க. சார்பில் தேர்வுசெய்யப்பட்டனர். 2001ல் கட்சித் தலைவர் ஜெயலலிதா போட்டியிட ஏதுவாக தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தவர். இதையடுத்து அவர், மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, டிடிவி தினகரனின் அ.ம.மு.கவில் இணைந்து செயல்பட்டுவந்தார். இதனால், சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 2019ஆம் ஆண்டு தேர்தலில் அ.ம.மு.கவின் சார்பில் தேனி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இதற்குப் பிறகு, டிடிவி தினகரனுடனான கருத்து வேறுபாடுகள் முற்றிய நிலையில், 2019ஆம் ஆண்டு ஜூன் மாதம் தி.மு.கவில் இணைந்தார். 2021ல் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்திற்கு எதிராக தி.மு.க. சார்பில் போட்டியிட்ட தங்கதமிழ்ச் செல்வன், தோல்வியடைந்தார். இப்போது மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

செல்வகணபதி, சேலம் தொகுதி: செல்வகணபதி அ.தி.மு.கவிலிருந்து தி.மு.கவுக்கு வந்தவர். 1995-96ஆம் ஆண்டுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர். 2008ஆம் ஆண்டில் தி.மு.கவுக்கு வந்த இவருக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி அளிக்கப்பட்டது. ஆனால், சுடுகாட்டுக் கூரை அமைப்பதில் ஊழல் செய்ததாக இவர் மீது இருந்த வழக்கில் தண்டனை அளிக்கப்பட்டதை அடுத்து அவர் பதவியிழந்தார். பிறகு அந்த வழக்கில் இருந்து கடந்த ஆண்டு நவம்பரில் இவர் விடுவிக்கப்பட்டார். இப்போது சேலம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பாக 1999ல் இதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கிறார் செல்வகணபதி. தற்போது தி.மு.கவின் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளராக இருந்து வருகிறார். ●

